ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

NATIONAL FILM CORPORATION OF SRI LANKA

# 2016 වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# ஆண்டறிக்கை

# 2016

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அறிமுகம் | 01 |
| நிருவாக அறிக்கை | 02 - 26 |
| நிலுவை அறிக்கைகளில் இலாப நட்டக் கணக்குடனான குறிப்புகள | 28 - 66 |
| கணக்காய்வாய்ளர் அறிக்கை | 67 - 86 |

## சமர்ப்பணம்

திகதி : 2017.11.06 எனது இலக்கம் : එන්එෆ්සී/103/05/02/98

கௌரவ அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்
ரஞ்சித் மத்தும பண்டார அவர்கள்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

கௌரவ அமைச்சர் அவர்களே,

**<u>இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்–ஆண்டறிக்கை 2016</u>**

1980 இலக்கம் 45 இனை உடைய சட்டம் திருத்தியமைக்கப்பட்ட 1971 இலக்கம் 47 இனைச் சேர்ந்த இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவு மற்றும் 1971 இலக்கம் 38 இனைக் கொண்ட நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் பிரகாரம் 2016 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவு பெறும் வருடத்தினை முன்னிட்டு பின்வரும் ஆவணங்களுடன் ஆண்டறிக்கையினைச் சமர்ப்பிக்கின்றேன்.

1. 2016 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் தொடர்புடைய கூற்றுக்கள்
2. 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் இலாப நட்ட கணக்குகள், அவை சார்ந்த குறிப்புக்கள் மற்றும் அத் திகதிக்கான இருப்புநிலைக் குறிப்பு
3. 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கணக்காய்வாளரின் அறிக்கை

இப்படிக்கு
உண்மையுள்ள,

சிதேந்திர சேனாரத்ன
தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்.

## <u>ஆண்டறிக்கை</u>


01. அறிமுகம்

02. பணிப்பாளர் குழு

03. உள்நாட்டு திரைப்படத் தயாரிப்புக்கள்

04. ஆளணி மற்றும் தாபன நிர்வாகம்

05. திரைப்பட விளம்பரம் / சினே அட்ஸ்

06. திரைப்படக் கண்காட்சி

07. உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

08. சினிமாக் கலாச்சாரம் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள்

09. உள்நாட்டு வழங்கல்கள் – ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

10. திரைப்படக் களஞ்சியம்

11. சட்ட ரீதியான நடவடிக்கைகள்

12. நிதி நடவடிக்கைகள்

13. கலையகம்

14. ஆராய்ச்சி நடவடிக்கைகள்

15. நலன்புரி

16. விளையாட்டுச் சங்கம்

17. மத ரீதியான நடவடிக்கைகள்

18. வைத்திய உதவி முறை

19. தொழிற்சங்கம்

20. நன்றி நவிழல்

## 01. <u>அறிமுகம்</u>

1980 இலக்கம் 45 இனை உடைய சட்டம் திருத்தியமைக்கப்பட்ட 1971 இலக்கம் 47 இனைச் சேர்ந்த இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவு மற்றும் 1971 இலக்கம் 38 இனைக் கொண்ட நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் கௌரவ அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார அவர்கள் மற்றும் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான அறிக்கை.

2016 ஆம் ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 45 ஆம் செயற்பாட்டு ஆண்டுக்கு உரியதாகும்.

## 02. <u>பணிப்பாளர்க் குழு</u>

2016 ஆம் ஆண்டின் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் குழுவானது பின்வரும் பெயர்களைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.

1. சட்டத்தரணி திரு. தீபால் சந்திர்ரத்ன -தலைவர்
2. திரு. சம்பத் சுபசிங்ஹ ஆரச்சி -செயற்பாட்டுப் பணிப்பாளர்
3. கலாநிதி எஸ்.கே.எம்.டீ. தர்ஷனி குணதிலக -ப.கு.உறுப்பினர் (பதவிஅதிகாரம்)
4. நிபுணத்துவ வைத்தியர் அனில் சமரநாயக -ப. கு. உறுப்பினர்
5. திருமதி. பி.வீ.பி. தயாரத்ன -ப. கு. உறுப்பினர்
6. திரு. நயன ஹெட்டியாரச்சி -ப. கு. உறுப்பினர்
7. திரு. அமல் அல்வீஸ் -ப. கு. உறுப்பினர்
8. திருமதி. என். கொடகந்த -பொதுத் திறைசேரிப் பிரதிநிதி
9. சட்டத்தரணி திருமதி. டப்.கே.விக்கிரமாரச்சி -பணிப்பாளர் குழுச் செயலாளர்.

## 03. <u>உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பு</u>

### 3.1 உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பிற்காக பதிவு செய்தல்.

2016 ஆம் ஆண்டினுள் பதிவு செய்யப்பட்ட திரைப்படங்களின் எண்ணிக்கை 54 ஆகும்.

ஒரு திரைப்படத்தினைப் பதிவு செய்வதற்காக ரூபா. 2000 ஆன தொகையினை கூட்டுத்தாபனம் தயாரிப்பாளர்களிடம் இருந்து அறவிட்டுக் கொள்கின்றது.

### 3.2 உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பிற்காக பெற்றுக் கொடுக்கப்படும் கடன் வசதிகள்

#### 3.2.1 கலையக சேவைக் கடன் வசதிகள்

அங்கீகரிக்கப்பட்ட கலையக சேவைக் கடன் வசதிகளின் பெறுமதி ரூபா. 400,000 /- ஆகும். இவ் வருடத்தினுள் கலையக சேவைக் கடன் வசதிகள் எந்தவொரு திரைப்படத் தயாரிப்பாளரும் அல்லது கோரியிருக்கவில்லை.

### 3.2.2 திரைப்படத் தயாரிப்பிற்கான கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

இவ் வருடத்தினுள் திரைப்படத் தயாரிப்பிற்காக தயாரிப்புக் கடன் வசதிகள் எதுவும் கோரப்பட வில்லை.

### 3.2.3 விசேட கடன் வசதிகள்

இவ் வருடத்தினுள் எதுவித கடன் வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

### 3.2.4 பிரதிகளை அச்சிடுவதற்காக கடன் வசதிகளை வழங்குதல்.

இவ் வருடத்தினுள் பிரதிகளை அச்சிடுவதற்காக கடன் வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

### 3.2.5 பிரச்சார நடவடிக்கைகளுக்குகடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

கூட்டுத்தாபன (ரித்மா) குழுவின் கீழ் 2016.12.20 ஆந் திகதிய காட்சிக்காக விடுவிக்கப்பட்ட "சரிகம" திரைப்படத்திற்கான பிரச்சார நடவடிக்கையின் பொருட்டு ரூபா. 20 மில்லியனை விசேட கடனாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.2.6 துணை தலைப்புக்களுக்காணகடன் வசதிகளை வழங்குதல்.

இவ் வருடத்தினுள் எந்தவொரு துணை தலைப்புக்கான கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுக்க வில்லை.

## 3.3 திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைப் பதிவு செய்தல் மற்றும் தொழில்நுட்ப அடையாள அட்டையினை வழங்குதல்.

வருடத்தினுள் நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் 24பேருக்கு புதிய அடையாள அட்டையினை விநியோகித்தல் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

## 3.4 உள்நாட்டு திரைப் படத் தயாரிப்பிற்காக வெளிநாட்டு நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்களைப் பயன்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுதல்.

- தர்மயுத்தய என்ற திரைப்படத்தின் இயக்குனர் மற்றும் கேமரா இயக்குனர்களுக்காக ரூபா. 500,000/- இனைக் கொண்ட தொகையினை அறிவிட்டுள்ளார்கள்.

**3.5 உள்நாட்டு நாடகங்கள் / வர்த்தக அறிக்கை நிகழ்ச்சித் திட்டங்களை படப்பிடிப்பு செய்வதற்காக கேமரா உபகரணங்களை வெளிநாட்டவர்களினால் திரும்ப கொண்டு செல்லல் எனும் அடிப்படையின் பேரில்அனுமதிக்காக கிடைக்கப்பெறும் அறவிடல்கள்.**

வெளிநாட்டு வர்த்தக விளம்பர நிகழ்ச்சித் திட்டங்கள் 05 இற்காக ரூபா. 25,000/- ஆன தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**3.6 சிறந்து விளங்கும் கலைஞர்களை பாராட்டுதல்.**

- திரைப் பட இயக்குனர் மற்றும் நடிகரான திரு தி சில்வா அவர்களுக்கு உள்நாட்டு சினிமாத் துறையின் முன்னேற்றத்திற்காக மேற்கொண்டுள்ள சேவைமதிப்பீட்டுக்காக ரூபா. 25,000/- வினை கொண்ட நிதியினை நன்கொடையாக வழங்கல்.
- மூத்த நடிகர் திருமதி சுமனா அமரசிங்க அவர்களுக்கு ரூபா. 25,000/- இனைக் கொண்ட நிதியினை நன்கொடையாக வழங்கல்.
- திரைப் பட இயக்குனர் மற்றும் நடிகரான திரு. சதிஷ்சந்திர எதிரிசிங்க அவர்களின் கலை வாழ்வு வருடம் 55 இனை பூர்த்தி செய்யும் வகையில், அவருக்கு ரூபா. 50,000/- இனைக் கொண்ட நிதியினை நன்கொடையாக வழங்கல்

**வைத்திய உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.**

பின்வரும் நடிகர்களுக்காக வைத்திய உதவியாக ஒருவருக்கு ரூபா. 50,000/- என்ற விகிதத்தில் ஒரு வருடத்தினுள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

- ஒளி புகைப்படக்காரர் திரு. சிரிலால்
- திரைப்பட இயக்குனர் திரு. சிரிமால் விஜேசிங்க
- திரைப்பட இயக்குனர் திரு. தினேஷ் பிரியசாத்
- நடிகை திருமதி. ஷந்தி ரசிகா
- நடிகர் திரு. ஆனந்த விக்ரமகே
- பாடகர் திரு. பிரின்ஸ் உதயபிரியந்த

**இறுதிச் சடங்கிற்கான உதவிகள்**

- இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி, மூத்த கலைஞர் கலாநிதி திரு. டீ.பீ. நிஹால் சிங்க அவர்களின் மரணத்திற்காக தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனத்தில் இருந்து ரூபா. 500,000/- இனைக் கொண்ட நிதியினை செலவாக ஏற்றார்கள்.

இதற்கு மேலதிகமாக இறுதிச் சடங்குகளின் பொருட்டு பின்வரும் கலைஞர்களுக்கு ரூபா. 50,000/- என்ற விகிதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

- ஒலிக் கட்டுப்பாட்டாளர் மற்றும் பிண்ணனிப் பாடலைஒலிப் பதிவேடு செய்யும் கலைஞர் திரு. மேர்வின் பென்ஸ் அவர்கள்.
- மூத்த நடிகர் திரு. விமல் குமார த கொஸ்தா அவர்கள்.
- திரைப்பட இயக்குனர் திரு. சிரி குலரத்ன அவர்கள்.
- மூத்த திரைப்பட சண்டை இயக்குனர் திரு. சரத் த சில்வா அவர்கள்.

### 3.7 திரைப்பட இறக்குமதி

இவ் வருடத்தினுள் திரைப்பட இறக்குமதிக்காக பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 24 ஆகும்.

அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டினுள் கண்காட்சிக் குழுக்கள் 05 இன் மூலம் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மற்றும் ஏனைய மொழிகளைக் கொண்ட திரைப்படங்கள் 119 இனை இறக்குமதி செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 3.8 திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான கூட்டுத்தாபன நம்பிக்கை நிதியம்

**3.8.1** ஓய்வூதியம் வழங்குதல் ( ஒருவருக்கு ரூபா. 2,000/- என்ற விகிதம்)

- சனவரி – மார்ச் ( ஓய்வூதியதாரர்கள் 58 பேருக்காக) ரூபா. 116,000.00
- ஏப்ரல் – திசெம்பர் (ஓய்வூதியதார்ர்கள் 57போருக்காக) ரூபா. 114,000.00

**3.8.2 2016 ஆம் ஆண்டினுள் மரணித்த ஓய்வூதியப் பயன்பெறுநர்கள்**

ஓய்வூதியப் பயன்பெறுநர்களான1 நடிகர் திரு. திஸ்ஸ உடங்கமுவ அவர்கள் மரணித்துள்ளார்கள்.

### 3.9 <u>தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம்</u>

**3.9.1 தனிச் சிறப்பு வாய்ந்த கலைஞர்களைப் பாராட்டுதல்.**

- உள்நாட்டு திரைப்படத்தின் முன்னேற்றத்திற்காக தன்னுடைய நடிப்புப் பங்களிப்பினை வழங்கிய நடிகை திருமதி எட்னா சுமதிபால அவர்களுக்கு தன்னுடைய சேவை மதிப்பீட்டிற்காக ரூபா. 50,000/- இனை மற்றும் நிதியினை நன்கொடையாகப் பெற்றுக்கொடுத்தல்.

- கலாநிதி திரு. எட்வின் ஆரியதாச அவர்கள் கலைத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பினைப் போற்றும் வகையில் சேவை மதிப்பீட்டிற்காக ரூபா. 50,000/- இனை நிதி நன்கொடையாக பெற்றுக்கொடுத்தல்.

**3.9.2 வெளிநாட்டு / நாடகங்கள் அல்லது நாடகத் தொடர்கள் / ஆவணப் படங்கள் / வர்த்தக விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை படப்பிடிப்புக்களுக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொடுத்தல்.**

இவ் வருடத்தினுள் தொலைத் திரைப்படங்கள், ஆவணத் திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பர நிகழ்ச்சித் திட்டங்கள் 68 இற்கான நிதியினை அறவிட்டுக் கொள்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 04. <u>ஆளணி மற்றும் நிறுவன நிர்வாகம்</u>.

### 4.1 <u>பணியாட்தொகுதியினர்</u>

| | | |
|---|---|---|
| 2016.01.01 ஆந் திகதிய பணியாட்தொகுதியினர் | - | 132 |
| 2016 ஆம் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் | - | |

**2016 ஆம் வருடத்தினுள் விலகிச் சென்றவர்களின் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| ஒய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை | - | 05 |
| சேவையில் இருந்து இராஜினாமாச் செய்தவர்களின் எண்ணிக்கை | - | 01 |
| | | -<u>06</u> |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்தப்பட்ட பணியாட்தொகுதியினர் | - | 126 |
| தலைவர் | - | 01 |
| செயற்பாட்டுப் பணிப்பாளர் | - | 01 |
| நாளாந்தக் கொடுப்பனவு | - | 01 |
| ஒப்பந்த அடிப்படையில் | - | <u>01</u> |
| 2016.12.31 ஆந் திகதிக்கு உள்ள மொத்த ஊழியர்கள் | - | <u>130</u> |

### **4.2**<u>நிறுவன நிர்வகாம் மற்றும் ஊழியர்களின் தேவைகளை நிறைவேற்றல்</u>.

நிறுவன ஊழியர்களின் நிர்வாகத்துக்கு உரியதாக பின்பற்றப்படும் செயற்பாடுகளை முன்கொண்டு சென்று சேவை நடவடிக்கைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுதல்.

## 05. <u>திரைப்பட விளம்பரங்கள் / சினே அட்</u>

**5.1**இவ் வருடத்தினுள் நிறைவேற்றிய பணிகள்

**5.1.1**உள்நாட்டு ரீதியாக காட்சிக்கு விடப்பட்ட சிங்கள திரைப் படங்களின் அச்சிடப்பட்ட பிரச்சார நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| i. சுகத கொகா | ii. ஹொரா பொலிஸ் |
| iii. நடன் நெதுவ தின்னா | iv. சுஜாத புத்ர |
| v. வீரவர்ண | vi. ரஜா மமய் |
| vii. சக்காரங் | viii. மோடர் பைசிகள் |

**5.1.2இறக்குமதி செய்யப்பட்ட தமிழ், ஆங்கிலம் மற்றும் ஹிந்தி திரைப்படங்களின் அச்சிடப்பட்ட விளம்பர நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| i. | Bajiro Mastani | ii. Saala Khadoos | iii. Neerja |
| iv. | Waziy | v. Fitoor | vi. Dhanak |
| vii. | Kapool & Sons | viii. House Full III | ix. Kabali |
| x. | Dishoom | xi. Pink | xii. M.S.Doni |
| xiii. | Irumugal | ivx. Thodavi | |

**5.1.3ஊடக விளம்பர நடவடிக்கைகள்**

**பின்வரும் நடவடிக்கைகளுக்கு உரித்தான அச்சிடப்பட்ட மற்றும் ஊடக விளம்பர நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளது.**

- உள்நாட்டு சினிமாவின்  69 ஆம் ஆண்டு ஞாபகர்த்த தினம் மற்றும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 44 ஆம் ஆண்டு ஞாபகர்த்த தின விழா.
- வெள்ளத்தினால் மூழ்கிய லின்சிகே லோகய எனும் புத்தகத்தினை வெளியிடுவதற்காக கொழும்பு ஜயவர்தன நிலையத்தில் நடாத்தப்பட்ட சினிமாக் கருத்தரங்கு
- கூட்டுத்தாபனத்தின் மூலம் நாடு தழுவிய ரீதியில் நடாத்தப்படும் "வாழ்வுக்கு சினிமா" எனும் சினிமா நிகழ்ச்சித்திட்டம்
- "கடந்த நிலை சினிமா மற்றும் சினிமா குடும்பம்" என்ற கருப்பொருளின் கீழ் நடாத்தப்பட்ட சினிமா உரையாடல்.
- ரோயல் தாய் தூதரகத்தின் மூலம் நடாத்தப்பட்ட தாய்லாந்து திரைப்பட விழா
- இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலகம், இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட அகதிகள் தொடர்பான திரைப்பட விழா
- ஏப்ரல் மாதத்தில் நடாத்தப்பட்ட கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட திரைப்படம்
- இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் ஆரம்ப காலம் முதலே திரைப்படவியல் டிப்ளோமா பாடநெறிக்கு உரித்தான
- 2016 ஆம் வருடத்தில் காட்சிப்படுத்தப்பட்ட உள்நாட்டு திரைப்படங்கள் 09 உம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டுத் திரைப்படங்கள் 17 இற்கும் உரித்தான.

**<u>ஏனையவை</u>**

- நிறுவனத்தில் நடைபெறும் செயற்பாடுகள் பற்றி ஊடகங்களை விழிப்பூட்டும் நடவடிக்கை.
- 2015 ஆம் ஆண்டு சனாதிபதி விருது விழா ( சினிமா தீர்ப்பாயம்) திரைப்படங்களை பார்வையிடும் உதவி நடவடிக்கை

## 06. <u>திரைப்படங்களை காட்சிப்படுத்தல்</u>

### 6.1 கூட்டுத்தாபன காட்சிக் குழுமம் ( ரித்மா என்டர்பிரய்சஸ்)

- 2016 ஆம் ஆண்டினுள் ரித்மா குழுமத்தின் கீழ் திரையரங்குகள் 59 இனை செயற்படுத்துதல்.
- தற்காலிகமாக மூடி வைத்துள்ள சுண்ணாகம் – நகம்ஸ் திரையரங்கினை 2016 ஆம் ஆண்டில் மீள தீரைப்படக் காட்சி நடவடிக்கைகளுக்காக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

### 6.2 திரைப்படங்களை காட்சிக்கு விடுவித்தல்

- திரையரங்குகள் 59 இற்காக ரித்மா சபையினால் திரைப்படங்கள் காட்சிக்காக விடுவிக்கப்பட்டுள்ளன.
- 2016 ஆம் ஆண்டினுள் ரித்மா சபை மற்றும் ஏனைய சபைகளுடன் கூட்டிணைந்து திரைப்படங்களை காட்சிக்காக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ரித்மா சபையினால் சிங்கள திரைப்படங்கள் 06 இனை காட்சிக்காக விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இவ் வருடம் சனவரி மாதம் முதல் வழங்குநர்களின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் 29 இனை மற்றும் ஹிந்தி திரைப்படங்கள் 14 இனையும் ரித்மா சபை மற்றும் ஏனைய சபைகளின் திரையரங்குகள் மற்றும் கூட்டிணைந்து காட்சிப்படுத்தும் வகையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்கில் இருந்து (கோட்டா) மற்றும் ஏனைய சபைகளின் பங்குகளில் (கோட்டா) திரைப்படங்களைப் பெற்று ரித்மா சபையின் மூலம் காட்சிப்படுத்த விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.)
- திரைப்படஒளிக் கதிர் முறைமைகள் 03 இனை தயாரித்து அதிகளவு சிங்கள திரைப்படங்களை காட்சிக்கு விடுவிப்பதற்கு உரித்தான அதிக வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல்.

**6.3 திரைப்பட வாடகை**

எமது சபையினால் ஏனைய சபைகளுக்கு வழங்கப்படும் திரைப்படங்களுக்காக பின்வரும் வகையில் திரைப்பட வாடகை பணம் கிடைக்கப்பெற்றுள்ளது. (2016 யூலை மாதம் வரை)

- லங்கா பில்ம்ஸ் டிஸ்ட்ரிபியுடார்ஸ் கம்பெனி ( பிரைவட்) லிமிடெட்
  -ரூபா. 1,326,385.02
- மூவி பிரடியுஸார்ஸ் அன்ட் இம்போடார்ஸ் கம்பெனி (பிரைவட்) லிமிடெட்
  - ரூபா. 698,960.76 ( 2016 மார்ச்சு மாதம் வரை மாத்திரம்)
- சினிமா என்டார்டெயின்மென்ட் (பிரைவட்) லிமிடெட் - ரூபா. 5,275,957.72
- ஈ.ஏ.பி. பில்ம்ஸ் அன்ட் தேடர்ஸ் (பிரைவட்) லிமிடெட் - ரூபா. 2,498,531.47

எமது சபைக்கு ஏனைய சபைகளிடம் இருந்து பெற்றுக்கொண்ட திரைப்படங்களுக்காக பின்வரும் வகையில் பணம் செலுத்தப்பட்டுள்ளது. (2016 ஒக்டோபர் மாதம் வரை)

- லங்கா பில்ம்ஸ் டிஸ்ட்ரிபியுடார்ஸ் கம்பெனி ( பிரைவட்) லிமிடெட்
  - ரூபா. 3,407,077.46
- மூவி பிரடியுஸார்ஸ் அன்ட் இம்போடார்ஸ் கம்பெனி (பிரைவட்) லிமிடெட்
  - ரூபா. 3,438,348.98
- சினிமா என்டார்டெயின்மென்ட் (பிரைவட்) லிமிடெட் -ரூபா. 30,179,915.80
- ஈ.ஏ.பி. பில்ம்ஸ் அன்ட் தேடர்ஸ் (பிரைவட்) லிமிடெட் -ரூபா. 38,669,373.52
- ரிபோ வைப்பு

2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை ரூபா. 58,000,000.00 ஆந் தொகை வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் மாதம் வரை கழிவுப் பணம் வருமானமாக ரூபா. 32,515,829,46 ஆகும்.

- 2016 ஆம் ஆண்டினுள் பல்வேறு சங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான சலுகை விலையொன்றின் கீழ் நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வதற்காக திரைப்படங்களை பெற்றுக்கொடுத்தல்.

- பொலிஸ் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் இராணுவ முகாம்களுக்கு சலுகை விலையில் மற்றும் இலவசமாக திரைப்படங்களை பெற்றுக்கொடுத்தல்

## 07. உள்ளக கணக்காய்வு நடவடிக்கை

உள்ளக கணக்காய்வு நடவடிக்கை 1971 இலக்கம் 38 இனைக் கொண்ட நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க மற்றும் கணக்காய்வாளரின் அவதானத்திற்கு உட்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
வருடத்தினுள் செயற்படுத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் வகையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களை உள்ளடக்கி காணப்படுகின்றார்கள்.

திருமதி. என். கொடகந்த அவர்கள் - பொது திறைசேரியின் பிரதிநிதி – சங்கத் தலைவர்

திருமதி. டப். ஶ்ரீயானி ஹங்வெல்ல அவர்கள் -உள்ளகக் கணக்காய்வாளர் – சங்கச் செயலாளர்

நிபுணத்துவ வைத்தியர் அனில் சமரநாயக்க அவர்கள் - சங்க உறுப்பினர்

கலாநிதி. எஸ்.கே.எம். தர்ஷனி குணதிலக அவர்கள் - சங்க உறுப்பினர்

அமல் அல்வீஸ் அவர்கள் - சங்க உறுப்பினர்

திருமதி. என்.பீ.குமாரி அவர்கள் - கண்காணிப்பு அலுவலர் (கணக்காய்வாளர் திணைக்களம்)

வருடத்தினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 02 தடவைகளில் நடைபெற்றுள்ளது.

## 08. சினிமாக் கலாச்சாரம் மற்றும் கல்வி நடவடிக்கைகள்

### 8.1 “ வாழ்விற்கு சினிமா” சினிமா பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டங்கள்

| | திகதி | நிகழ்ச்சித்திட்டங்கள் | இடம் | கலந்து கொண்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 2016.02.24 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | ஹொரண ஶ்ரீபாலிவித்தியாலயம். | 100 |
| 2 | 2016.03.14 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | ADIC நிறுவனம், கொழும்பு 05. | 60 |
| 3 | 2016.03.29 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | பிரதேச செயலகம் – பலாங்கொடை | 70 |
| 4 | 2016.05.25 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | திபுலாகல கல்விப் பிரிவு - வெலிகந்த | 150 |
| 5 | 2016.06.05 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | செஞ்சிலுவைக் கேட்போர்கூடம் - சிலாபம் | 70 |
| 6 | 2016.06.06 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | மயுரபாத வித்தியாலயம் - நாரம்மல | 200 |
| 7 | 2016.07.15 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | அபேபுஸ்ஸ சிறைச்சாலை | 60 |
| 8 | 2016.08.25 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | வரகாபொல தொழில்நுட்பக் கல்லூரி | 60 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | 2016.10.19 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | குளியாப்பிடிய மத்திய வித்தியாலயம். | 200 |
| 10 | 2016.10.20 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | டீ.எஸ். சேனாநாயக்க வித்தியாலயம் – கொழும்பு | 200 |
| 11 | 2016.11.29 | திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம் | கே/ கேகாலை மகளிர் வித்தாயலயம் | 200 |

**கல்வி சார் திரைப்படக் கட்சிகள்**

| | திகதி | நிகழ்ச்சித்திட்டம் | இடம் | கலந்து கொண்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 12 | 2016.01.12 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | புளூமென்டல் சிங்கள கனிஷ்ட வித்தியாலயம் | 100 |
| 13 | 2016.03.02 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | கிரில்லவல மத்திய மகா வித்தியாலயம் | 100 |
| 14 | 2016.03.14 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு | 70 |
| 15 | 2016.05.23 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | பரம விசித்ராநந்த மகா விகாரை – காலி | 200 |
| 16 | 2016.06.21 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | வாரியபொல ஶ்ரீசுமங்கல மகா வித்தியாலயம் | 250 |
| 17 | 2016.06.06,07,08 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | மகிந்த வித்தியாலயம் - காலி | 200 |
| 18 | 2016.07.19 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | பிரதேச செயலகம் – பலாங்கொடை | 200 |
| 19 | 2016.07.29 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | விகாரமகா தேவி மகளிர் வித்தியாலயம் – கிரிபத்கொடை | 100 |
| 20 | 2016.08.05 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | பொலிஸ் குற்றவியல் அறிக்கைப் பிரிவு – கொழும்பு 07 | 70 |
| 21 | 2016.09.08 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | பிரதேச செயலகம் - ஹதரலியந்த | 60 |
| 22 | 2016.09.06,07,08 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | வயம்ப பல்கலைக்கழகம் - குளியாப்பிடிய | 100 |
| 23 | 2016.09.24 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | கலாச்சார நிலையம் – ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 125 |
| 24 | 2016.09.07 | | பிரதேச செயலகம் - சீதாவக | 70 |
| 25 | 2016.08.25 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | தொழில்நுட்பக் கல்லூரி – வரகாபொல | 70 |
| 26 | 2016.09.30 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | பாதுகாப்புச் சேவை வித்தியாலயம் – கொழும்பு 02 | 70 |
| 27 | 2016.12.16 | திரைப்படத்தைக் காட்சிப்படுத்தல் | கோபவக கோவின்ன சுமனாராம விகாரை | 100 |

**சினிமா உரையாடல்கள்**

| | திகதி | நிகழ்ச்சித்திட்டம் | இடம் | கலந்து கொண்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 28 | 2016.05.05 | சினிமா உரையாடல் – "கடந்த நிலை சினிமா மற்றும் சினிமா குடும்பம்" | சினிமாக் கூட்டுத்தாபனம் | 200 |
| 29 | 2016.06.30 | சினிமா உரையாடல் – " சினிமா மற்றும் குடும்பம்" | சினிமாக் கூட்டுத்தாபனம் | 250 |

**8.2 திரைப்படவியல் டிப்ளோமா பாடநெறி2016/2017**

- முதலாம் தவணைப் பரீட்சை இடம்பெற்றுள்ளது.

8.3 2016 ஆம் ஆண்டிற்கான " திரைப்படச் சஞ்சிகை" இனை வெளியிடுதல்.

- சனவரி – ஏப்ரல் இதழ்
- மே – ஆகஸ்ட் இதழ்
- செப்டம்பர் – திசெம்பர் இதழ்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.
- சினிமா நூலகத்திற்கான புத்தகங்கள் சுமாராக 20 இனை புதிதாகப் பெற்றுக்கொள்ளல்.
- உலக சினிமாவினுள் விருதுகள் கிடைக்கப்பெற்ற திரைப்படங்கள் 20 இனை நூலகத்திற்கு பெற்றுக்கொடுத்தல்.

## 09.உள்நாட்டு வழங்குநர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

- திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனத் தேவைகளுக்கு இணங்க தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அலுவலக காகிதாதிகள் மற்றும் உபகரணங்களை உரிய முறைப்படி கொள்வனவு செய்து வழங்குதல்.
- கூட்டுத்தாபனத்தின் புதிய அலுவலக கட்டிடத்தினை பிரிவுகளாக பிரித்து ஒதுக்குதல்.
- கூட்டுத்தாபன திரையரங்குகளை எண்ணியல் ( டிஜிடல்) தொழில்நுட்ப முறைக்கு ஏற்ப மாற்றம் செய்யும் நடவடிக்கை.
- குறித்த முகவர் நிலையங்களுடன் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு உரிய
- சேவை ஒப்பந்தங்களை இற்றைப்படுத்தி பேணிச் செல்ல

## 10. திரைப்படக் களஞ்சியம்

### 10.1 பணிகள்

- திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டுத் திரைப்படங்கள் மற்றும் உள்நாட்டு ரீதியாக வெளியிடப்பட்ட திரைப்படங்களை கையேற்று பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அத் திரைப்படங்களை ஏற்று தரங்களைப் பரீட்சித்துப் பார்த்து பொது செயல்திறன் சபையிடம் சமர்ப்பித்தல், தர அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு வருமானத்தினை ஈட்டிக்கொள்வதற்கு வழியேற்படுத்தல். பொது செயல்திறன் சபையின் அங்கீகாரத்திற்கு14இணங்க மீள தர அறிக்கையினைப் பெற்றுக்கொண்டு இறக்குமதியாளர்கள் / தயாரிப்புக்களை விநியோகிக்கும் சபையிடம் கையளித்தல் மற்றும் திரையரங்குகளுக்கு பகிர்ந்தளித்தல்.
- கூட்டுத்தாபன சபையின் மூலம் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட திரைப்படங்களை குறித்த திரையரங்குகளுக்கு புகையிரதத்தின் மூலம் கையினால் திரைப்படங்களை அனுப்புதல் மற்றும் உரிய வகையில் மீளப் பெற்றுக்கொள்ளல்.
- அத் திரைப்படங்களுக்கு உரிய முன் பிரச்சாரப் படங்கள் மற்றும் பொருட்களை திரையரங்குகளுக்கு முன்னதாகவே அனுப்பிவைத்தல்.
- திரைப்பட களஞ்சியசாலைக்கு கிடைக்கப்பெறும் சகல திரைப்படங்களையும் மீள பரீட்சித்துப் பார்த்து அலுமாரிகளில் அடுக்குதல்.
- அலுமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள திரைப்படங்களை அவ்வப்போது பரீட்சித்துப் பார்த்தல்.
- திரைப்பட தரப் பரீட்சையின் மூலம் சம்பாதித்துக் கொண்ட கிட்டத்தட்ட ரூபா. 10 இலட்சமாகும்.
- திரைப்படக் களஞ்சியசாலையில் காணப்படும் பழைய திரைப்படங்களை புனரமைத்து மீள காட்சிப்படுத்துவதற்கு உகந்த வகையில் தயாரித்தல் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு வருமானமொன்றினை ஈட்டிக்கொடுத்தல்.
- பழைய திரைப்படங்களில் ஓட்டத்திற்கு உகந்த பிரதிகள் 03 இனை மாத்திரம் களஞ்சியசாலையில் வைத்துக் கொண்டு எஞ்சிய சகல திரைப்படங்களையும் உரிமையாளர்களுக்கு ஒப்படைப்பதன் மூலம் திரைப்படக் களஞ்சியசாலையின் பராமரிப்பு நடவடிக்கைகளை முறைமைப்படுத்துதல்.
- திரைப்படக் களஞ்சியசாலையில் குவிந்துள்ள ஒப்பந்த காலம் முடிவுற்ற திரைப்படங்கள் மற்றும் சேதமடைந்த திரைப்படங்களை உரிமையாளர்களுக்கு அறிவிப்புச் செய்ததன் பின்னர் உரிய முறைப்படி எரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதும் அதன் போது எஞ்சும் சாம்பலினை விற்று கூட்டுத்தாபனத்திற்கு வருமானமொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- சிங்கள திரைப்படங்கள் 15 இனை (மி.மீ. 35) இனை பதிவு செய்துள்ளார்கள்.

- காப்பகத்தில் வைப்புச் செய்துள்ள சிங்கள திரைப்படங்களின் தரங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 11. சட்டரீதியான நடவடிக்கைகள்

### 11.1 பணிகள்

- கூட்டுத்தாபனம் தரப்பாக அமைந்த வழக்கு தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக கோப்பிடல் மற்றும் குறித்த நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக தோற்றுதல்.
- தொழில் திணைக்களத்திற்கு முன்னிலையில் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்காக கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக தோற்றுதல்.
- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள், இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள், திரைப்படங்களை விநியோகித்தல் தொடர்பாக மற்றும் திரைப்படத் தயாரிப்புக்கள் / கலையகச் சேவைகள் / பிரதிகளை அச்சிடல் / துணை உரைகளைப் புகுத்துதல் / பிரச்சார நடவடிக்கைகளுக்கான கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான சகல சட்டரீதியான ஒப்பந்தங்களையும் தயாரித்தல் மற்றும் கையொப்பமிடல்.
- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு ஆதரவு வழங்கும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் வேறு நடவடிக்கைகள் தொடர்பாக சகல சட்டரீதியான ஒப்பந்தங்களையும் தயாரித்தல் மற்றும் கையொப்பமிடல்.
- அன்றாட தேவைகளுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு பிரிவிற்கும் அனுப்பப்படும் சட்டரீதியான பிரச்சினைகளுக்கான ஆலோனைகளை வழங்குதல்.

### 11.2 நீதிமன்ற நடவடிக்கைகள்

11.2.1 2016 ஆம் ஆண்டினுள் செயற்பாட்டுக் கொண்டிருக்கும் மற்றும் செயற்படும் வழக்குகள் தொடர்பான விபரங்கள்

1. மேன்முறையீட்டு வழக்கு இலக்கம் : 870/99
2. கொழும்பு நீதவான் நீதிமன்றம் வழக்கு இலக்கம் : 97659/5/11
3. மாவட்ட நீதிமன்றம் வழக்கு இலக்கம் DMR 1126/2012 -சினி சிட்டி திரையரங்குகள் 4 இலிருந்தும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கூட்டுத்தாபன நம்பிக்கை நிதியத்தினை செலுத்தாமை தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் வழக்கு தொடரப்பட்டுள்ளது.
4. கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் :DSP/00026/2013, DSP/00027/2013, DSP/00028/2013, DSP/00029/2013, DSP/00030/2013
5. மேன்முறையீட்டு மனு இலக்கம் : CA (Writ) Application No: 144/2013
6. தொழில் நியாய சபையின் வழக்கு இலக்கம் : 13/41/2013

7. தொழில் நியாய சபையின் வழக்கு இலக்கம் : 2/435/2014
8. DMR 2603/2013 "வலாபடல" திரைப்படம்
9. CHC 370/2014"சுபா" திரைப்படம்
10. கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் :DSP 140/2015
11. கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் : DSP 00128/2016
12. கொழும்பு நீதவான் நீதிமன்றம் வழக்கு இலக்கம் :MC 30392/5
13. கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் வழக்கு இலக்கம் : 47446/1/16
14. உச்ச நீதிமன்ற வழக்கு இலக்கம் : HCCA/LA 181/2016
15. தொழில் திணைக்களத்தில் நடைபெற்ற விசாரணைகள்
    I. தொழில் அலுவலகத்தின் முறைப்பாட்டு இலக்கம் : IR/15/19/2012 – கூட்டுத்தாபன ஊழியர் திரு. சமித திஸாநயக்க.
    II. தொழில் அலுவலகத்தின் முறைப்பாட்டு இலக்கம் : CC/C/EPF/583/2015 – கூட்டுத்தாபன ஊழியர் திரு. கே. எச். நிலன்த் பிரஸாத்.

**12.** நிதி நடவடிக்கைகள்

**12.1** வருமான மூலங்கள்

| **வருமானம்** | **2015 ஆம் ஆண்டின் உண்மையான ரூபா.மில்லியன்** | **2016 ஆம் ஆண்டின் உண்மையான ரூபா. மில்லியன்** | **அதிகரித்தல் / குறைதல் %** | **2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் ரூபா. மில்லியன்** |
|---|---|---|---|---|
| விநியோகித்தல் கழிவுகள் – உள்நாட்டு<br>வெளிநாடு | 18.9<br>16.7 | 15.7<br>21.4 | (16.9)<br>28.1 | 18<br>12.5 |
| அதிகரித்தல் (கூட்டுத்தாபன நம்பிக்கை நிதியம்) | 7.8 | 8.3 | 6.4 | 8 |
| இதரக்கட்டணம், விசாரணை அபராதத் தொகை மற்றும் ஏனைய | 3.8 | 5.9 | 55.3 | 5.1 |
| சினே அட்ஸ் கழிவுகள் | 0.4 | 0.5 | 25 | 0.4 |
| கலையகத்தின் வருமானம் | 2.3 | 2.4 | 4.3 | 2.05 |
| வியாபார நடவடிக்கைகள் | 3.7 | 3.3 | (10.8) | 3.05 |
| செயற்படுத்தற் வருமானம் | 53.6 | 57.5 | 7.3 | 49.1 |
| ஏனைய வருமானம் | 48.7 | 62.1 | 27.5 | 68.32 |
| திறைச்சேரியில் இருந்து மீண்டுவரும் செலவீனத்திற்கான வரவுகள் | 80 | 74.3 | (7.1) | 101 |
| **மொத்த வரவுகள்** | **182.3** | **193.9** | **6.4** | **218.42** |

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வருமானத்தில் 2016 ஆம் ஆண்டின் செயற்பாட்டு வருமானம் 7.3% ஆக அதிகரித்துள்ளதனை சுட்டிக் காட்டுகின்றது. வெளிநாட்டு விநியோகித்தல் கழிவுகள் 28.1% ஆக உயர்ந்திருப்பதானது இவ் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும்.

இதரக் கட்டணம், விசாரணை அபராதத் தொகை மற்றும் ஏனைய வருமானங்கள் 55.3% இனால் அதிகரித்துள்ளதானது ஒட்டுமொத்த வருமானத்தினதும் அதிகரிப்பில் தாக்கம் செலுத்தியுள்ளது. மேலும், ஏனைய வருமானம் 27.5% ஆல் அதிகரிப்பானது ஒட்டுமொத்த வருமான அதிகரிப்பிலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

### 12.2 செலவு மூலங்கள்

| செலவுகள் | 2015 ஆம் ஆண்டின் உண்மையான ரூபா.மில்லியன் | 2016 ஆம் ஆண்டின் உண்மையான ரூபா. மில்லியன் | அதிகரித்தல் / குறைதல் % | 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|
| பணியாளர் ஊதியம் | 77.6 | 80 | 3.09 | 94.5 |
| பயண மற்றும் பிழைப்பூதியப் படி | 0.4 | 1.7 | 325 | 2 |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 6 | 7.4 | 23.33 | 4 |
| பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புத் தேய்மானங்கள் | 28.4 | 29.7 | 4.58 | 5 |
| தேசிய திரைப்பட விழா | - | 5 | 100 | - |
| விற்பனைச் செலவுகள் | 2.9 | 2.7 | (6.90) | 3 |
| போக்குவரத்து தொடர்புகள், தேவைகள் மற்றும் ஏனைய | 14.4 | 17.3 | 20.14 | 42 |
| அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு | 11 | 2.9 | (73.64) | 5 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 20.5 | 7.1 | (65.37) | 5 |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் நிதியம் | 0.2 | 0.5 | 150 | 2 |
| **மொத்த வரவுகள்** | **161.4** | **154.3** | **4.40** | **158** |

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது விற்பனைச் செலவுகள் 6.9% இனாலும், அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடுகள் 73.64% இனாலும் மற்றும் பணிக்கொடை ஒதுக்கீடுகள் 65.37% இனாலும் குறைந்திருப்பதானது ஒட்டுமொத்த செலவுகள் குறைவடைவதில் தாக்கம் செலுத்தியுள்ளது.

| | **2015** | **2016** |
|---|---|---|
| | **ரூபா.மி** | **ரூபா.மி** |
| செயற்பாட்டு வருமானம் | 53.6 | 57.5 |
| செயற்பாட்டுச் செலவு | 161.5 | 154.3 |
| செயற்பாட்டு இலாபம் / நட்டம் | (107.9) | (96.8) |
| ஏனைய வருமானம் | 48.7 | 62.1 |
| ஆண்டிற்கான இலாபம் / நட்டம் | (59.1) | (34.7) |
| மீண்டுவரும் செல்வுகள் - வரவுகள் (திறைசேரியிலிருந்து) | 80 | 74.3 |
| மிகை | 20 | 39.6 |

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டும் போது 2016 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நட்டம் 11.13% இனால் குறைவடைந்துள்ளது. ஏனைய வருமானங்கள் 27.51% இனாலும் அதிகரித்துள்ளது. அதன் காரணமாக 2015 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டிற்கான நட்டம் 41.45% இனால் குறைவடைந்துள்ளது. மீண்டுவரும் வரவுகளை சீராக்கியதன் பின்னர் 2015 ஆம் ஆண்டினை விட 2016 ஆம் ஆண்டில் 90% இனால் மிகையானது அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணமாக அமைவது, 2015 ஆம் ஆண்டினை விட 2016 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு வருமானம் அதிகரித்தல் மற்றும் 2015 ஆம் ஆண்டினை விட செயற்பாட்டுச் செலவுகள் குறைவடைதலாகும்.

### 12.3 நிலையான சொத்துக்கள்

இவ் ஆண்டின் மூலதனச் செலவுகளுக்கான மதிப்பிடப்பட்ட தொகை ரூபா. 20 மில்லியன் பணத்தினை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டிற்கான சினிமா படக்காட்சி இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 0.4 மில்லியனும், புதிய கட்டிடத்தினை பிரித்து வெவ்வேறாக ஒதுக்குவதற்காக ரூபா. 6.7 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டுள்ளது. இவ் ஆண்டிற்கான தேய்மானம் ரூபா. 22 மில்லியன்களாகும்.

### 12.4 நடப்புச் சொத்துக்கள்

கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நடப்புச் சொத்துக்கள் ரூபா. 98 மில்லியனால் அதிகரித்துள்ளது. குறுகிய கால முதலீடானது 2015 ஆம் ஆண்டினை விட ரூபா. மில்லியனால் அதிகரித்திருப்பது முதலீடு செய்துள்ள வைப்புக்களுக்காக கிடைக்கப்பெறும் வட்டியினை மீள முதலீடு செய்தல் மற்றும் ரிபோ வைப்பினை கொள்வனவு செய்வதாகும்.

தரங்கனி திரையரங்குகளுக்கான ஒலி உபகரணத் தொகுதியினைப் பொருத்தியதன் காரணமாக இருப்பு ரூபா. 2.9 மில்லியனால் குறைவடைந்துள்ளது.

### 12.5 நடப்புப் பொறுப்புக்கள்

திரைப்பட வாடகை கடன் வழங்குநர்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா. மில்லியனால் அதிகரித்துள்ளது.

## 13. கலையகம்

தயாரிப்புக்குப் பின்னரான கட்டங்களில் நிலவும் திரைப்படங்களுக்கான தொழில்நுட்பச் சேவைகள் மற்றும் வசதிகளை வாய்ப்புக்களை வழங்குவது கலையகத்தின் பிரதான பணியாகும்.
அதற்கிணங்க, வழமை போன்று 2016 ஆம் ஆண்டிலும் கலையகம் பின்வரும் பிரிவுகளைக் கொண்டு உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பளர்களுக்கு அவசியப்படும் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் வசதிகளை வழங்கியுள்ளது.

1. ஒலிப் பிரிவு (Digital)
2. நிரல் அற்ற தொகுப்புப் பிரிவு( Digital)
3. திரைப்பட மற்றும் ரூபவாஹினி படப்பிடிப்பு கலைக்கூடம்

### 13.1 நிறைவேற்றப்பட்டிருக்கும் பணிகள்

1. சரசவி கலையகத்தினால் திரைப்படத் துறைக்கு வழங்கும் தொழில்நுட்ப வகதிகளுக்கு ஏற்ப உள்நாட்டு திரைப்படங்கள் சுமார் 24 இற்கான ஒலிப் பிரிவினால் மற்றும் திரைப்படங்கள் 06 இற்கானநிகர் அற்ற பதிப்புப் பிரிவினால் தொழில்நுட்ப சேவைகள் இக் காலப்பிரிவினுள் வழங்கப்பட்டுள்ளது.
2. திரைப்பட மற்றும் ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டங்களைப் படப்பிடிப்பு செய்வதற்கான வசதிகளை கலையகத்தின் உள்ளக கலைக்கூடம் மற்றும் கலையத்தின் தாழ்வாரத்தினைப் போன்றே பூங்காவினுள்ளும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளதோடு, குறித்த காலப்பகுதியினுள் 08 திரைப்படங்களும், 12 ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டங்களுக்குமாக படப்பிடிப்பு செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.
3. கலையகத்தின் ஒலிப் பிரிவின் ஒரு கலைக்கூடத்தினை சர்வதேச தரத்திற்கு ஏற்ப பன் பரிமான ஒலிப் பதிவுகளுக்காக நவீனமயப்படுத்துதல்.

தற்போது கலையத்தினால் உள்நாட்டு சினிமாத் துறைக்கு வழங்கப்படும் அடிப்படை திரைப்படத் தயாரிப்பிற்குப் பின்னரான தொழில்நுட்ப வசதிகள் ( Basic Film Post Production Facilities) சர்வதேச தரத்திற்கு ஏற்பஇற்றைப்படுத்தல் (Upgrade) மேற்கொள்ளல்.
இந்திய ஒலி தொடர்பான ஆலோசகர் திரு. வீ. கிஷோர் அவர்களின் தொழில்நுட்ப ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்படும் இச் செயற்திட்டத்திற்கான விலை மனு கோரப்பட்டு ஒப்பந்தத்தினை வழங்குவதற்கு அவசியப்படும் அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4. கலையகத்தில் டிஜிடல் பதிப்புப் பிரிவிற்கான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய பதிப்புத் தொகுதியினைக் கொள்வனவு செய்து உயர் தரத்துடைய வர்ண திருத்தங்களை மேற்கொள்ளல் ( Color Correction) மற்றும் முப்பரிமாண பட நிர்மாணங்களை உருவாக்குவதற்கான (Computer generated image) தொழில்நுட்பத்தினை மேம்படுத்துதல்.

மேற்குறிப்பிட்ட வகைகள் 2K, 4K, high resolutionஉடன் கூடிய ஊடக ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல். திரைப்படமொன்றினை பதிப்புச் செய்வதற்கு முன்னர் வர்ண திருத்தங்களை ( Color Correction) மேற்கொள்ளல் மற்றும் கணனியுடன் தொடர்புபட்ட பட நிர்மாணங்களை மேற்கொள்ளல் (Computer generated image) என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு சினிமாத் துறைக்கு அவசியப்படும் வகையில் இப் பிரிவினை இற்றைப்படுத்துவதற்காக தேவைப்படும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.

இச் செயற்திட்டத்திற்காக விலை மனுக்கள் கோரப்பட்டு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக அவசியப்படும் அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. தேசிய திரைப்படக் கல்லூரியொன்றினை ( National Film Academy) கலையக வளாகத்தினுள் நிர்மாணிப்பதற்காக அவசியப்படும் அடிப்படை திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 13.2 கலையகத்தில் படப்பிடிப்பின் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப சேவைகளைப் பெற்றுக்கொண்ட திரைப்படங்கள் -2016

**ஒலிப் பிரிவு**

1. அதுரு மிதுரு ஹரி அபூரு
2. ஹோ கானா பொகுண
3. வெஸ்வலாகத் தருணிய
4. ஆதர கதாவக்
5. ஹீன ஹொயன சமனல்லு
6. கொட உட எக்ஸ்பிரெஸ்
7. ரன் சயுர
8. டொக்டர் நவரியன்
9. வீரவர்ண
10. பபர வசந்தய
11. The great elephant gather of Sri Lanka
12. The Undecided
13. கோமலி கிங்
14. Breaking News
15. Jobless Doiglas
16. அப்பட சிரி
17. Sons & Fathers
18. ஹெட ஹதர மாயங்

19. புஞ்சி வீரயோ
20. புஞ்சி அந்தரே
21. ஆதரை தாமத் உசஸ்பெலட
22. எல டபல
23. அலி கதாவ
24. SLF- Practical Lessons

**நிகர் அற்ற தொகுப்புப் பிரிவு**

1. கொட உட எக்ஸ்பிரெஸ்
2. பிலிகடதுராவ
3. சுரகனா
4. நடன்னெதிவ தின்னா
5. ரஜானோ
6. அதுரு வெததுரு புதமு நமதிமு

**கலையகத்தில் படப்பிடிப்பச் செய்யப்பட்ட திரைப்படங்கள் / ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டங்கள்–2016**

1. Derana – Dell Studo
2. ருசிராணெனியே கீதய
3. கொட உட எக்ஸ்பிரெஸ் திரைப்படம்
4. Derana Little Star – Season 08
5. Asia Broadcasting (Pvt) Ltd. – Hiru Unplugged
6. பரதலீ திரைப்படம்
7. Raigam – Gemak nethi Show
8. யம ரஜ சிரி – திரைப்படம்
9. Sons & Father
10. அதுரு வெததுரு புதமு நமதிமு
11. EAP Network (Pvt.) Ltd Swarnawahini – Tokyo Cement All Island School Quiz – Season 03.
12. பெதுரு சாதய
13. ஹேலோ மிஸ்டர் மங் டிரேக்டர் – திரைப்படம்
14. திரு. சுனில் எதிரிசிங்க அவர்களின் - பாடல்
15. EAP Network (Pvt.) Ltd Swarnawahini – Mareena Rasa Saraniya – Star Chef Hunt
16. RDB Bank – உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டம்
17. அலி கதாவ – திரைப்படம்
18. அலுத் கதாவக்
19. நவ தெமோதர பாலம
20. அனோரா – திரைப்படம்

### 13.3 இவ் ஆண்டினுள் கலையத்துக்கான வரவுகள்

| | | ரூபா. |
|---|---|---|
| படப்பிடிப்பகத்தின் வசதிகள் | - | 2,346,750.00 |
| தொகுப்பிற்கான வசதிகள் | - | 137,675.00 |
| படப்பிடிப்புச் செய்தல் | - | 4,452,118.15 |
| **மொத்தம்** | **-** | **6,936,543.15** |

## 14. <u>பரீட்சிப்பு நடவடிக்கைகள்</u>

14.1 இவ் ஆண்டினுள் பரிசோதனைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளாவன,

- திரையரங்குகளை நிர்மாணிப்பதற்காக காணி, கட்டிடம் தொடர்பாக தகவல்களை சேகரித்தல்.
- புதிய திரையரங்குகளை திறந்து வைத்தல் மற்றும் மூடப்பட்டிருக்கும் திரையரங்குகளை மீள திறத்தல்.
- திரையரங்குகளைப் பரீட்சித்துப் பார்த்தல்.
- வெளிநாட்டு படப்பிடிப்புக்களை கண்காணித்தல்.

14.2 திரையரங்குகளை நிர்மாணிப்பதற்காக காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்.

2016 ஆம் ஆண்டினுள் திரையரங்குகளை நிர்மாணித்தல் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் திரையரங்குகள்

**நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் திரையரங்குகள்**

- யாழ்ப்பாண மாவட்டம் – பருத்தித்துறையில் புதிய திரையரங்குத் தொகுதி
- கிளிநொச்சி புதிய திரையரங்குத் தொகுதி
- மட்டக்களப்பு ஷாந்தி திரையங்கிற்கு அண்மையில் நிர்மாணிக்கப்படும் திரையரங்கு
- செங்கலடி செல்வம் 02 திரையரங்கு
- ராஜகிரிய புதிய திரையரங்கு
- கொள்ளுபிடிய செக்சான் திரையரங்கு
- காலி சரசவி திரையரங்கு அமையப்பெற்றுள்ள இடத்தில் நிர்மாணிக்கப்படும் திரையரங்கு

**காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்**

பின்வரும் நகரங்களில் திரையரங்குகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- முந்தளம்
- கொட்டாவ
- தெனியாய
- ஊருபொக்க
- மாத்தரை

- கிரிஉல்ல
- ஹொரணை

## 14.3 புதிய திரையரங்குகளை திறந்து வைத்தல் மற்றும் மூடிக் காணப்படும் திரையரங்குகளை மீளத் திறந்து வைத்தல்.

திறந்து வைக்கப்பட்ட புதிய திரையரங்குகள்

- விஸ்டா லைட் – ஜாஎல
- ஸ்கை லைட் – மாலபே
- விஜயந்தி சினமா 2 – கடுவெல

## 14.4 திரையரங்குகளைப் பரீட்சித்துப் பார்த்தல்.

இவ் வருடத்தினுள் திரையரங்குகள்850 தடவைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளன.

திரையரங்குகளில் இடம்பெறும் முறைகேடுகளுக்கான பற்றுக் குறிப்பினை வழங்குதல்.
பரிசோதனை அலுவலர்களினால் திரையரங்குகளைப் பரீட்சித்துப் பார்க்கும் போது பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது. அதற்காக கூட்டுத்தாபனத்தின் சுற்றறிக்கைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2016 ஆம் ஆண்டினுள் ரூபா. 1,284,760/- இனைக் கொண்ட பெறுமதியுடைய பற்றுக் குறிப்புக்கள் 99 இனை வழங்கியுள்ளது. அவற்றில் ரூபா. 929,040/- இனைக் கொண்ட தொகை அறவிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட பற்றுக் குறிப்புக்களினால் இவ் ஆண்டில் அறவிடப்பட்ட பற்றுக் குறிப்புக்கள் 05 இன் தொகை ரூபா. 96,230/- ஆகும்.

## 14.5 வெளிநாட்டு படப்பிடிப்புக்கள் தொடர்பான கண்காணிப்பு

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் வர்த்தக விளம்பரங்கள், திரைப்படங்கள் மற்றும் ஆவணப்பட நிகழ்ச்சித்திட்டங்களை படப்படிப்பு செய்வதனை கண்காணிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2015 ஆம் ஆண்டினுள் வெ ளிநாட்டு படப்பிடிப்புக்கள் 62 இன் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 15. <u>நலன்புரி</u>

கூட்டுத்தாபன நலன்புரியின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் கடன் வழங்கல் சங்கத்தின் நடவடிக்கைகள் சங்கத்தின் அங்கத்துவத்திற்காக இவ் ஆண்டினுள் செயற்பட்டுள்ளது.

## 16. <u>விளையாட்டுச் சங்கம்</u>

இவ் ஆண்டினுள் பின்வரும் செயற்பாடுகள் மற்றும் வெற்றிகள் இச் சங்கத்தினால் அடையப்பெற்றுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் பணியாட்தொகுதியினரை பங்குபெறச் செய்வதற்காக புத்தாண்டு விளையாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- ஜனசது சேவா எல்லை, கெரம் போட்டித் தொடர்களுக்கு விளையாட்டு வீரர்களைப் பங்குபெறச் செய்தல்.
- ஜனசது சேவை எல்லைப் போட்டித் தொடரில் பங்குபற்றி, “பீ” ப் பிரிவில் வெற்றி வாகையினைச் சூட்டிக்கொள்ளல்.
- எசிதிசி கிரிக்கெட் போட்டிற்காக முதற் தடவையாக கூட்டுத்தாபனத்தினை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் மகளிர் குழுவொன்றினை அனுப்பிவைத்தல்.
- உள்ளக கெரம் போட்டித் தொடரினை நடாத்தி விளையாட்டு வீரர்களை தரப்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளல்.
- கெரம் விளையாட்டுக்கு அவசியப்படும் காய்களை ஸ்டைகர் ஸ்டூல் 12 இனைப் பெற்றுக்கொள்ளல்.

## 17. <u>மத ரீதியான நடவடிக்கைகள்</u>

17.1 பௌத்த சங்கம்

- ஒவ்வொரு ஆண்டிலும் சனவரி மாதம் 21 ஆந் திகதியன்று நடாத்தப்படும் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த விழா நாள் மற்றும் சினிமாவின் வருடாந்த விழா நாளினை முன்னிட்டு இரவு முழுவதும் தர்மச் சொற்பொழிவினை நடாத்துதல் மற்றும் மறுநாள் காலை உணவை வழங்குதல்.
- வெசக் விழாவினை முன்னிட்டு கூட்டுத்தாபன வளாகம் முழுவதும் வெசக் அலங்காரங்களை மேற்கொள்ளல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கான பெறுமதி வாய்ந்த அறவழிப் புத்தகமொன்றினை வழங்குதல்.
- ஒவ்வொரு வருடமும் வெசக் விழாவினை முன்னிட்டு கூட்டுத்தாபன வளாகத்தினுள் மேற்கொள்ளப்படும் கோப்பி தன்ஸலை இரத்துச் செய்து அக் காலப் பகுதியினுள் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்கு பகற் போஷனத்தினைப் பெற்றுக்கொடுத்தல்.

**17.2 கிரிஸ்தவ சங்கம்**

கூட்டுத்தாபன பணியாட்தொகுதியினரின் பிள்ளைகளைப் பங்குபெறச் செய்து வருடாந்த நத்தார் பண்டிகையினை நடாத்துதல்.

## 18. வைத்திய உதவிகள் வழங்கும் முறைமைகள்

அங்கத்துவ நிதி மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் நிதியினை அடிப்படையாகக் கொண்டு நடாத்திச் செல்லப்படும் வைத்திய உதவிகளை வழங்கும் முறையானது இவ் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு, அதன் நிர்வாகக் குழுவினர் பின்வருமாறு அமையப்பெற்றுள்ளது.

திரு. எச்.ஏ.யூ. ஜயலத் - குழுத் தலைவர் ( ப.க. பொது முகாமையாளர்- நிதி)

திரு. நாமல் வீரபாகு - குழு உறுப்பினர் ( நிர்வாக அலுவலர் – நிர்வாகம் மற்றும் மனித வளம்)

திரு. ஆர்.பீ. திஸ்ஸ - குழு உறுப்பினர் ( செயலாளர் – இலங்கை சுதந்திர ஊழியர் சங்கம்)

திரு. கே.ஆர். வின்சன் - குழு உறுப்பினர் ( பிரதிநிதி– தேசிய ஊழியர் சங்கம்)

திரு. சுகித இலங்ககோன் -குழு உறுப்பினர் (தலைவர்–திரைப்படக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கம்)

திரு. எச்.டீ. அசங்க குணதிலக –தொழிற்பாட்டு அலுவலர்

## 19. தொழிற் சங்கங்கள்

தேசிய ஊழியர் சங்கம் , இலங்கை சுதந்திர ஊழியர் சங்கம் மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் இவ் ஆண்டினுள் நிர்வாக அதிகார சபையுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## 20. விசேட நன்றி

நிரல் மத்திய அமைச்சுக்களில் மாற்றங்கள் ஏற்பட்டதன் காரணமாக தலைவர் உட்பட பணிப்பாளர் சபையினர் இராஜினாமாச் செய்துள்ளதுடன், முன்னாள் தலைவர் சட்டத்தரணி தீபால் ஷந்திர ரத்ன அவர்கள் கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சி மற்றும் நலன்களுக்காக கடந்த காலங்களில் மேற்கொண்ட பணிகளை மதிப்பிடும் வகையில் இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.

இக் காலப்பகுதியினுள் பின்வரும் விரிவாக்கச் செயற்திட்டங்கள் அவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

1. சினிமாக் கல்லூரியினை நிறுவுதல் ( Establishment of National Film Academy)
2. திரைப்பட ஆவணக்காப்பகம் மற்றும் திரைப்படங்களை மீள்நிலைப்படுத்தல் அலகொன்றினை நிறுவுதல்( Establishment of National Film Archives and Film Restoration Unit)

## 21. <u>நன்றி நவிழல்</u>

2016 ஆம் ஆண்டினுள் சாதகமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்காக கூட்டுத்தாபன பணியாட்தொகுதியினர் மிகவும் பொறுப்புடன் மற்றும் சலனமடையாத் துணிச்சலுடன் தங்களது சேவைகளை நிறைவேற்றியுள்ளார்கள். அச் சேவைகளை பணிப்பாளர் சபைமிக்க பாராட்டுவதோடு அவர்களுக்கு தங்களது நன்றியை உளப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிதேந்திர சேனாரத்ன
தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்.

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2016.12.31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான
## விரிவான வருமானக் கூற்று

| விபரம் | குறிப்பு | 2016 | 2015 | 2016 காட்சி | 2016 திரையரங்குகள் | 2016 தயாரிப்பு | 2016 பொது நிருவாக செலவுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| விற்பனை | 03 | 57,500,610 | 53,594,147 | 522,273 | 2,345,086 | - | 54,633,251 |
| குறைக்கப்பட்டது ( விற்பனை செலவு | 04 | 2,763,999 | 2,866,206 | - | (186,852) | - | (2,577,147) |
| அன்னளவு இலாபம் | | 54,736,611 | 50,727,941 | 522,273 - | 2,158,234 - | - | 52,056,104 |
| குறைக்கப்பட்டது ( செலவு | | | | | | | |
| சேவையாளர் சேவை முயற்சிகள் | 05 | 80,053,840 | 77,611,315 | 11,950,044 | 10,799,678 | 9,639,357 | 47,664,761 |
| பிரயாண மற்றும் பிழைப்பூதியக் கொடுப்பனவு | 06 | 1,658,035 | 429,651 | - | 12,140 | 3,705 | 1,642,190 |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 07 | 7,376,420 | 6,145,388 | - | 1,469,344 | - | 5,907,076 |
| புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு மற்றும் தேய்வுகள் | 08 | 29,662,545 | 28,406,798 | - | 5,948,866 | - | 23,713,679 |
| போக்குவரத்து" தொடர்புகள்" தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள் | 09 | 17,309,406 | 14,386,447 | 339,627 | 1,425,073 | 274,045 | 15,270,661 |
| அறவிட முடியாக் கடனிற்காக வேண்டி சேதமாக்கப்பட்ட பொருத்தப்பாடுகள் | | 2,809,819 | 10,995,465 | - | - | - | 2,809,819 |
| பணிக்கொடை நிதியங்களை ஒதுக்குதல் | | 7,131,335 | 20,485,019 | 1,287,564 | 905,434 | 272,063 | 4,666,274 |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் நிதியத்திற்காக வேண்டி நிதி ஒதுக்குதல் | | 500,000 | 200,000 | - | - | 500,000 | - |
| தேசிய திரைப்பட விழாக்களுக்காக நிதி ஒதுக்குதல் | | 5,000,000 | | - | - | 5,000,000 | - |
| பங்கு சேதங்கள் | | - | - | - | - | - | - |
| | | 151,501,400 | 158,660,083 | 13,577,235 - | 20,560,535 - | 15,689,170 | 101,674,460 |
| பொது நிருவாக செலவுகள் உள்ளீர்த்தல் | | - | - | 15,177,463 | 13,716,411 | 12,242,715 | (41,136,589) |
| | | 151,501,400 | 158,660,083 | 28,754,698 - | 34,276,946 - | 27,931,885 | 60,537,871 |
| செயற்பாட்டு இலாபம் / நட்டம் | | (96,764,789) | (107,932,142) | **(28,232,425) -** | **(32,118,712) -** | **(27,931,885)** | **(8,481,767)** |
| இணைத்துக் கொண்டவை : ஏனைய வருமானம் | 10 | 62,125,983 | 48,745,417 | | | | |
| வருடத்தின் இலாபம் / நட்டம் | | (34,638,806) | (59,186,725) | | | | |
| இணைத்துக் கொண்டவை : திரைசேறி பெறுகைகள் | | 74,250,000 | 80,000,000 | | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 39,611,194 | 20,813,275 | | | | |
| குறைக்கப்பட்டது : வரிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது | | - | - | | | | |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2016 டிசம்பர் 31 ஆந் திகதி**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| அங்கத்துவம் வகிப்பது | | | |
| நிலையான சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 11 | 348,504,036 | 356,557,037 |
| நீண்ட கால முதலீடு | 12 | 127,000 | 127,000 |
| | | 348,631,036 | 356,684,037 |
| அசையும் சொத்துக்கள் | | | |
| குறுகிய கால முதலீடுகள் | 13 | 283,799,769 | 207,087,271 |
| பங்குகள் | 14 | 6,373,332 | 9,329,064 |
| கடனாளிகள் | 15 | 182,390,282 | 140,875,826 |
| பல்வேறுபட்ட கடனாளிகள் | 16 | 171,981,587 | 159,015,837 |
| வைப்பு மற்றும் பிற்கால கொடுப்பனவு | 17 | 5,171,821 | 3,357,237 |
| நிதி மற்றும் வங்கி மீதிகள் | 18 | 36,731,083 | 67,844,504 |
| | | 686,447,874 | 587,509,739 |
| முழு சொத்துக்கள் | | **1,035,078,910** | **944,193,776** |
| இடப்பட்ட முதலீடுகள் | | | |
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனங்கள் | | 10,000,000 | 10,000,000 |
| ஒட்டுமொத்த இலாபம் | | 389,424,993 | 334,063,659 |
| வேறு ஒதுக்கீடுகள் | | 123,482,759 | 123,482,759 |
| | | 522,907,752 | 467,546,418 |
| அசையாத பொறுப்புக்கள் | | | |
| வழங்கல்கள் | 19 | 146,322,543 | 146,944,856 |
| பணிக்கொடை வேறாக்கள் | 20 | 35,932,903 | 49,392,704 |
| | | 182,255,446 | 196,337,560 |
| இணைத்துக் கொண்டவை அசையும் பொறுப்புக்கள் | | | |
| வைப்புக்கள் | 21 | 2,544,227 | 2,474,227 |
| திரைப்பட வாடகை கடன் உரிமையாளர்கள் | 22 | 275,556,800 | 242,661,692 |
| வேறு கடன் உரிமையாளர்கள் | 23 | 51,814,685 | 35,173,879 |
| | | 329,915,712 | 280,309,798 |
| மொத்த பொறுப்புக்கள் | | **1,035,078,910** | **944,193,776** |

இந்த நிதிக் கூற்றானது இலங்கை கணக்கீட்டு தரத்திற்கு இணங்க அமைக்கப்பட்டுள்ளது.

………………………    ………………    ………………

பொது முகாமையாளர் பதில் கடமை பார்க்கும் அலுவலர் - நிதி    தலைவர்    பணிப்பாளர்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
303, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07.

2017.02.23

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**

**2016.12.31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கானது**

**உரிமை மாற்றம் தொடர்பான கூற்று**

| | உரிமையான மூலதனம் ரூபா. | ஒட்டுமொத்த இலாபம் ரூபா. | மூலதன ஒதுக்கீடு ரூபா. | மறுமதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடு ரூபா. | வேறு ஒதுக்கீடுகள் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| **2015.01.01 ஆந் திகதிக்கு மீதி** | 10,000,000 | 334,063,659 | 499,898 | 115,153,399 | 7,829,462 | 467,546,418 |
| வருடத்திற்கான இாபம் | - | 15,750,140 | - | - | - | 15,750,140 |
| **2015.12.31 ஆந் திகதிக்கு மீதி** | 10,000,000 | 349,813,799 | 499,898 | 115,153,399 | 7,829,462 | 483,296,558 |
| வருடத்திற்கான இலாபம் | - | 39,611,194 | - | - | - | 39,611,194 |
| **2016.12.31 ஆந் திகதிக்கு மீதி** | **10,000,000** | **389,424,993** | **499,898** | **115,153,399** | **7,829,462** | **522,907,752** |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2016.12.31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கானது**
**நிதி நிலைமைக் கூற்று**

| | 2016 | 2015 |
|---|---|---|
| **பணிச் செயற்பாடுகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி** | ரூபா. | ரூபா. |
| வரி குறைப்பதற்கு முன்னரான தேறிய இலாபம் | (34,638,806) | (59,186,725) |
| ^குறைக்கப்பட்டது& | | |
| தயாரிப்புக் கடன் அடிப்படையிலான வட்டி | (1,048,738) | (396,064) |
| நிலையான மற்றும் திரைசேறி பற்றுச்சீட்டு வட்டி | (19,790,921) | (11,111,070) |
| | (55,478,465) | (70,693,859) |
| **நிதிப் பிரழ்வு தொடர்பாக தாக்கம் செலுத்தாத விடயங்களுக்கான சீராக்கங்கள்** | | |
| தேய்மானங்கள் | 22,068,858 | 21,160,625 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 7,131,335 | 20,485,019 |
| பணிக்கொடைக்கான அதிக ஒதுக்கீடு (2015) | (16,830,608) | |
| தயாரிப்புக் கடன் வட்டி குறைப்பின் ஒதுக்கீடு | 519,102 | |
| சந்தேகத்திற்கிடமான கடன்களுக்கான ஒதுக்கீடு | 2,809,819 | 10,995,465 |
| அரச வழங்கல்களை வருமானத்தில் அடையாளம் காணல் | (20,622,313) | (19,917,957) |
| நிலையான சொத்துக்களை நீக்குவதனால் ஏற்படும் நட்டம் | 46,875 | - |
| | (60,355,397) | (37,970,707) |
| **கடந்த கால வரையரைக்கான விடயங்கள்** | | |
| கடந்த கால வரையரைக்கான விடயங்களுக்காக வேண்டிய சீராக்கங்கள் | 15,750,140 | (1,479,671) |
| செயற்பாட்டு மூலதன விடயங்களின் வேறுபாடுகளுக்கு முன்னரான கண்காணிப்பு இலாபம் | (44,605,257) | (39,450,378) |
| **செயற்பாட்டு மூலதன விடயங்களின் மாற்றங்கள்** | | |
| பங்கு ( குறைப்பு) | 2,955,732 | 2,580,347 |
| கடனாளிகள் (அதிகரிப்பு) | (57,290,025) | (38,278,601) |
| வைப்புகள் மற்றும் எதிர்கால கொடுப்பனவுகள் (அதிகரிப்பு) | (1,814,584) | 7,453,516 |
| வைப்புகள் (அதிகரிப்பு) | 70,000 | (10,000) |
| கடன் உரிமையாளர்கள் (அதிகரிப்பு) | 32,895,108 | 34,050,893 |
| வேறு கடன் உரிமையாளர்கள் (அதிகரிப்பு) | 16,121,704 | (1,710,483) |
| | (51,667,322) | (35,364,706) |
| **குறைக்கப்பட்டது :** | | |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | (3,760,528) | (5,153,128) |
| | (55,427,850) | (40,517,834) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளினால் பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்கள்** | | |
| தயாரிப்பு கடன் வட்டி | 1,048,738 | 396,064 |
| நிலையான மற்றும் திரைசேறி உண்டியல் வட்டி | 19,790,921 | 11,111,070 |
| நிலையான சொத்துக்களை கையகப்படுத்திக் கொள்ளல் | (14,077,732) | (8,915,851) |
| சில்லறைத் தொகை - திரைப்படக் களஞ்சியசாலை | 34 | 34 |
| | 25,220 | 29,849 |
| மொத்தம் | 36,731,083 | 67,844,504 |
| குறிப்பு : 19 | | |
| வழங்கல்கள் | | |
| திரைசேறி வழங்கல்கள் | 166,944,856 | 166,862,813 |
| (-) கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைத்தல் | 20,622,313 | 19,917,957 |
| | 146,322,543 | 146,944,856 |

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2016 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
## நிதி நிலைமைகள் தொடர்பான குறிப்பு

| | 2016 | 2015 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| குறிப்பு : 20 | | |
| பணிக்கொடை ஒதுக்குதல் | | |
| முன் கொண்டுவரப்பட்ட நிலுவை - 2016.01.01 | 49,392,704 | 34,060,813 |
| 2015 ஆம் வருடத்திற்கான உயர் ஒதுக்கீடு | (16,830,608) | - |
| வருடத்திற்கான ஒதுக்கீடு | 7,131,335 | 20,485,019 |
| நிதிக் கொடுப்பனவு | (3,760,528) | (5,153,128) |
| | 35,932,903 | 49,392,704 |

(திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.)

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| குறிப்பு : 21 | | | |
| வைப்புக்கள் | | | |
| என். எப். சீ. திரையரங்குகளில் பிணை வைப்பு | | 130,000 | 60,000 |
| சிற்றூண்டிச் சாலை வைப்பு | | 30,000 | 30,000 |
| பாதுகாப்பு வைப்புக்கள் | திரையரங்கு | 2,326,727 | 2,326,727 |
| | பணியாளர்கள் | 5,000 | 5,000 |
| | திரைப்பட இறக்குமதி | 7,500 | 7,500 |
| | திரைப்பட செயற்திட்டம் | 45,000 | 45,000 |
| | | 2,544,227 | 2,474,227 |

| | 2016 | 2015 |
|---|---|---|
| குறிப்பு : 22 | | |
| திரைப்பட வாடகை கடனாளிகள் | | |
| திரைப்பட வாடகை கடனாளிகள் | 293,603,604 | 260,708,496 |
| (-) கடனாளிகளுக்காக வேண்டி சேதப்படுத்திய சீராக்கங்கள் | (18,046,804) | (18,046,804) |
| | 275,556,800 | 242,661,692 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2016 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
## நிதி நிலைமைகள் தொடர்பான குறிப்பு

குறிப்பு : 23

| | 2016 ரூபா. | 2015 ரூபா. |
|---|---|---|
| **ஏனைய கடன் உரிமையாளர்கள்** | | |
| பெருகிய செலவு | 14,841,780 | 5,953,251 |
| செலுத்தப்பட வேண்டிய சேர்க்கப்பட்ட பெறுமதியின் மீதான வரி | 152,613 | 152,613 |
| கணக்காய்வுக் கட்டண ஒதுக்கீடு | 1,586,720 | 1,486,720 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் (முத்திரை) | 36,455 | 43,030 |
| உரிமை கோரப்படாத ஊதியம் | 998,494 | 1,025,537 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 654,342 | 663,353 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 74,103 | 73,858 |
| பல்வேறு கடன் வழங்குநர் | 1,599,863 | 2,005,794 |
| (-) செலுத்தப்படாத பொறுப்புக்களுக்கான ஒதுக்கீடுகள் | (644,840) | (644,840) |
| பல்வேறு கடனாளிகள் (வரவு நிலுவை) | 1,110,955 | 1,245,505 |
| திரைப்பட வாடகை கடனாளிகள் | 3,982,955 | 3,477,940 |
| பொதுத் திறைசேரி | 5,000,000 | 5,000,000 |
| தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் | 3,525,795 | 3,525,795 |
| ரித்மா சபை நிர்வாகக் கணக்கு | 4,696,303 | - |
| சினே தரு புஞ்சி தாரகா | - | 31,750 |
| திரைப்பட விழாவிற்கன ஒதுக்கீட்டுக் கணக்கு | 10,000,000 | 5,000,000 |
| உழைக்கும் போது வரிச் செலுத்துதல் | 24,243 | 37,939 |
| சம்பளம் மற்றும் ஊதியங்களை ஒதுக்குவதற்கான கணக்கு | 714,182 | 714,182 |
| கிடைக்கப்பெற வேண்டிய தயாரிப்புக் கடன் வட்டியினை ஒதுக்குதல் | 3,460,722 | 5,381,452 |
| | **51,814,685** | **35,173,879** |

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2016 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
## வருமானக் கூற்றிற்கான குறிப்பு

| ஏனைய சேவைகள் | மொத்தம் 2016 ரூபா. | காட்சிகள் ரூபா. | கலையரங்கம் ரூபா. | தயாரிப்பு ரூபா. | பொது நிர்வாகச் செலவு ரூபா. |
|---|---|---|---|---|---|
| பணிப்பாளர் கட்டணம் | 718,170 | - | - | - | 718,170 |
| விளம்பரம் | 393,502 | - | - | - | 393,502 |
| விசேட கமிஷன் கட்டணம் | 146,812 | - | - | - | 146,812 |
| சட்டக் கட்டணம் | 916,197 | - | - | - | 916,197 |
| கூட்டுத்தாபன விழாக்கள் | 1,295,332 | - | - | - | 1,295,332 |
| கணக்காய்வுக் கட்டணம் | 600,000 | - | - | - | 600,000 |
| பாதுகாப்புச் சேவைகள் | 2,200,511 | - | 1,148,468 | - | 3,348,979 |
| வங்கிக் கட்டணங்கள் | 73,177 | - | - | - | 73,177 |
| பல்வேறு செலவுகள் | - | - | - | - | - |
| சினிமாக் கல்வி | 847,050 | - | - | - | 847,050 |
| வெளி இறப்பு நன்கொடைகள் மற்றும் சினிமாக் கலைஞர்களின் செலவு | 1,105,538 | - | - | - | 1,105,538 |
| புதிய திரையரங்குகளின் செலவு | 35,928 | - | - | - | 35,928 |
| தக்கவைத்துக் கொள்வதற்கான வரி | 157,836 | - | - | - | 157,836 |
| நாணயமாற்று விகித சீராக்கம் | - | - | - | - | - |
| தரைக் கதைகளை வாசித்தல் | 3,000 | - | - | - | 3,000 |
| திரைப்படங்களை கண்டுகளித்தல் | - | - | - | - | - |
| தாமதக் கட்டணம் | 64,177 | - | - | - | 64,177 |
| ஒப்பந்தப் புள்ளிக்கான செலவு | - | - | - | - | - |
| நிலையான சொத்துக்களை நீக்குதல் | 9,375 | - | - | - | 9,375 |
| | **8,566,605** | **-** | **1,148,468** | **-** | **9,715,073** |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**

**2016 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான**

**வருமானக் கூற்றிற்கான குறிப்பு**

| | மொத்தம் 2016 ரூபா. | காட்சிகள் ரூபா. | கலையரங்கம் ரூபா. | தயாரிப்பு ரூபா. | பொது நிர்வாகச் செலவு ரூபா. |
|---|---|---|---|---|---|
| போக்குவரத்து | **103,491** | - | - | - | **103,491** |
| தொடர்புகள் | **2,205,476** | **339,627** | **203,494** | **274,045** | **1,388,310** |
| <u>தேவைப்பாடுகள்</u> | | | | | |
| உள்ளகப் பிரயோகம் | 561,835 | - | - | - | 561,835 |
| வெளிநாட்டு திரைப்பட விழாக்கள் | 6,912 | - | - | - | 6,912 |
| நலன்புரிச் செலவுகள் | 3,341,482 | - | - | - | 3,341,482 |
| ஊழியர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் பயிற்சி | 277,110 | - | - | - | 277,110 |
| நீர் பற்றுச் சீட்டுகள் | 415,076 | - | - | - | 415,076 |
| | **4,602,415** | - | - | | **4,602,415** |
| வரி மதிப்பீடு | **682,951** | - | **73,111** | - | **609,840** |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2016.12.31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கானது
## விளக்கமான வருமானக் கூற்று

**2015.12.31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான வருமானக் கூற்று**

| | | SLFRS<br>2015<br>ரூபா. | அளவிட முடியுமான<br>மாற்றங்கள்<br>ரூபா. | SLFRS<br>2015<br>ரூபா. | |
|---|---|---|---|---|---|
| விற்பனை | | 53,594,147 | - | 53,594,147 | |
| குறைக்கப்பட்டுள்ளது : விற்பனைச் செலவு | | 2,866,206 | - | 2,866,206 | |
| மொத்த இலாபம் | | 50,727,941 | - | 50,727,941 | |
| குறைக்கப்பட்டுள்ளது : செலவு | | | | | |
| பணியாளர் ஊதியம் | | 77,611,315 | - | 77,611,315 | |
| பயண மற்றும் பிழைப்பூதியக் கொடுப்பனவு | | 429,651 | - | 429,651 | |
| வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள் | | 6,145,388 | - | 6,145,388 | |
| புதுப்பித்தல் பராமரித்தல் மற்றும் தேய்வுறுதல் | | | | | |
| (ஏ) பதுப்பித்தல் பராமரித்தல் மற்றும் தேய்வுறுதல் | | 28,406,798 | - | 28,406,798 | |
| போக்குவரத்து, தொடர்புகள், தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள் | | 14,386,447 | - | 14,386,447 | |
| அறவிடமுடியாக் கடனிற்காக ஒதுக்கீடு செய்தல் | | 10,995,465 | - | 10,995,465 | |
| பணிக்கொடையினை ஒதுக்குதல் | குறிப்பு 01 | 20,485,019 | 16,855,253 | 3,629,766 | |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் நிதியத்திற்காக ஒதுக்குதல் | | 200,000 | - | 200,000 | |
| கையிருப்பு சேதம் | | - | - | - | |
| | | 158,660,083 | 16,855,253 | 141,804,830 | 141,804,830 |
| பொது நிர்வாகச் செலவினை உள்ளடக்குதல் | | - | - | - | |
| | | 158,660,083 | 16,855,253 | 141,804,830 | |
| செயற்பாட்டு இலாபம் / நட்டம் | | (107,932,142) | (16,855,253) | (91,076,889) | |
| சேர்க்கப்பட்டுள்ளது : ஏனைய வருமானங்கள் | குறிப்பு 02 | 48,745,417 | (1,105,113) | 47,640,304 | |
| வருடத்தின் இலாபம் / நட்டம் | | (59,186,725) | 15,750,140 | (43,436,585) | |
| குறைக்கப்பட்டுள்ளது : திரைசேறியில் இருந்து கிடைக்கப் பெற்ற நிதி | | 80,000,000 | - | 80,000,000 | |
| | | 20,813,275 | 15,750,140 | 36,563,415 | |
| குறைக்கப்பட்டுள்ளது : வரிக்காக ஒதுக்குதல் | | - | - | - | |
| குறைவு / மேலதிகம் | | **20,813,275** | **15,750,140** | **36,563,415** | |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2016 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான**
**குறிப்பு**

**இணைப்பு**

| குறிப்பு | விளக்கம் | தொகை |
|---|---|---|
| | | ரூபா. சதம் |
| குறிப்பு 01 | உயர் பணிக்கொடை ஒதுக்குதல் | (16,855,253) |
| | | |
| குறிப்பு 02 | தக்க வைத்துக் கொள்ளப்பட்ட வரி ( நிலையான வைப்பு வட்டிக்காக அறவிடப்படும் வரி) | 3,180,320 |
| | கணக்கிடுதலை சரி செய்தல் | 458,868 |
| | உயர் கணக்காய்வுக் கட்டணங்களை ஒதுக்குதல் | (30,470) |
| | அதிகளவு கணக்கிட்டுள்ள தயாரிப்புக் கடன் வட்டி | (2,503,605) |
| | | **(15,750,140)** |

குறிப்பு : 24

பணிப்பாளர் சபையின் தொடர்புகள்

நிறுவனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டுத் தீர்மானங்களில் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களும் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட வில்லை 2016 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை தொடர்பான விரிவான விளக்கமொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் | நியமிக்கப்பட்ட திகதி | வகிக்கும் பதவி மற்றும் சேவை நிலையம் / முகவரி | முகவரி | தொடர்புபட்ட தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்களின் இயல்பு |
|---|---|---|---|---|---|
| 1 | சட்டத்தரணி திரு. தீபால் சந்திர்ரத்ன | 2015.03.04 | பணிப்பாளர் சபைத் தலைவர் தலைவர்- இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | தலைவர், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் - கொழும்பு 07. | - |
| 2 | திரு. சம்பத் சுபசிங்க ஆரச்சி | 2015.06.19 | செயற்பாட்டுப் பணிப்பாளர் - இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | செயற்பாட்டுப் பணிப்பாளர், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் - கொழும்பு 07. | - |
| 3 | கலாநிதி திரு. ரங்க கலன்சூரிய | 2016.06.07 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (உத்தியோகபூர்வமாக ) தகவல் பணிப்பாளர் நாயகம் - அரசாங்க தகவல் திணைக்களம் | பணிப்பாளர், அரசாங்க தகவல் திணைக்களம், கொழும்பு 05. | - |
| 4 | திரு. ஏரந்த ஹெட்டியாரச்சி | 2016.06.07 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (உத்தியோகபூர்வமாக ) பணிப்பாளர் நாயகம் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | பணிப்பாளர் நாயகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 07. | - |
| 5 | திருமதி. அனுஷா கோகுல பிரனாந்து | 2016.06.07 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (உத்தியோகபூர்வமாக ) கலாச்சாரப் பணிப்பாளர் - கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | கலாச்சாரப் பணிப்பாளர், கலாச்சார அலுவல்கள் திணைக்களம், செத்சிறிபாய, பத்தரமுல்ல. | |
| 6 | வைத்திய நிபுணர் திரு. அனில் சமரநாயக | 2015.05.14 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - மேல் மாகாண | இலக்கம் .182/1, ஹில் வீதி, தெஹிவலை. | - |
| 7 | திரு. அமல் அல்வீஸ் | 2015.05.14 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | இலக்கம்.300, பார்க் பாதை, கொழும்பு - 05. | - |
| 8 | திருமதி. பீ. வீ. பி. தயாரத்ன | 2015.02.06 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | இலக்கம். 59/3 , ஹீனடிகுபுர, தலங்கம பாதை, பத்தரமுல்ல. | - |
| 9 | திரு. நயன ஹெட்டியாரச்சி | 2015.04.06 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் | இலக்கம். 330/8, சமன் மாவத்தை, வெவபார, பொரலஸ்கமுவ. | - |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } சீஏஎஸ்/சீ/என்எப்சீ/1/16/எப்ஏ

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2018 ஏப்ரல் 30

தலைவர்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்.

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 31(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை நிறுவனத்தின் தலைவருக்கு 2018 ஏப்ரல் 10 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கூட்டுத்தாபனம் தொடர்ந்திருத்தல்

1999 ஆம் ஆண்டின் போது தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட திரைப்படங்களை பகிர்ந்தளிக்கும் தனியுரிமைத் தன்மை நீக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட பிரதான வருமான வழியாக இருந்த பகிர்ந்தளிக்கும் தரகுப் பணம் இழக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் வருமானம் செலவினங்களை ஈடுசெய்து கொள்வதற்கு போதுமான அளவில் காணப்படாமையின் அடிப்படையில் பொதுத் திறைசேரியினால் 2011 ஆம் ஆண்டு முதல் ஊழியர் சம்பளத்திற்காக நிதிஏற்பாட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

மேலும், மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 ஆண்டு காலப்பகுதியிலும் கூட்டுத்தாபனம் திறைசேரி மானியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்ற நிலைமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதி உதவியொன்று இன்றி கூட்டுத்தாபனத்தை நடாத்திச் செல்லல் நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம், திறைசேரி உண்டியல் மற்றும் மீள்விற்பனை உண்டியல்களை கணக்கீடு செய்யும் போது 03 மாதம் அல்லது அதற்குக் குறைந்த முதலீடுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் சமனான திரவச் சொத்தாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மூன்று மாத காலத்தில் காலாவதியாவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த திறைசேரி உண்டியல்களின் பெறுமதியான ரூபா 9,612,350 மற்றும் உண்டியல்களின் மீள்விற்பனை ரூபா 103,361,405 என்பன காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16**

(i) நியமத்தின் 79(அ) பந்தியின் பிரகாரம் பிரகாரம் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக கணக்குக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் கணனி திரைப்பட அரங்கத்திலுள்ள கறுப்பு, வெள்ளை மற்றும் நிற ஆய்வுகூடங்களிற்குச் சொந்தமான தொழில்நுட்ப ரீதியாக வழக்கற்றுப் போன பழைய சொத்துக்கள், கணக்கீடு செய்தல் மற்றும் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 79(ஆ) பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக ரூபா 250,899,989 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் அவை மேலும் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன. அதற்கிணங்க, இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19**

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் ஆயுட்கால எண்ணிக்கை மதிப்பீடொன்று மேற்கொண்டு ஊழியர் சேவைக்குப் பின்னரான நலன் ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக நிறுவனத்தால் சேவையின் பின்னரான நலன்களின் ஏற்பாடுகளுக்காக கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படாமல் ஒவ்வொரு ஊழியருக்கும் சேவையாற்றிய ஒரு வருடத்திற்கு அரை மாதத்திற்குச் சமமான பணிக்கொடைப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக 2006 சனவரி முதல் 2015 திசெம்பர் வரை வாழ்க்கைச் செலவுப்படி கவனத்தில் கொள்ளப்படாமல் பங்களிப்புப் பணம் கணிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 2,763,753 நிலுவைத் தொகையும், ரூபா 1,381,876 தொகையான மிகைக் கட்டணமும் செலுத்தவேண்டியேற்பட்டிருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் நபையின் அங்கீகாரம் 2017 ஏப்ரல் 27 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும் நியமத்தின் பிரகாரம் கணக்குகளில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 38**

நியமத்தின் 119 ஆம் பந்தியின் பிரகாரம் களணி பல்கலைக்கழக திரைப்பட அரங்கத்தில் உற்பத்திக்குப் பின்னரான நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்ட மென்பொருள் நிதிக்கூற்றுக்களில் அருவச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

நியமத்தின் 75(இ) ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்கள் இனங்காணப்பட்டு அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தால் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் மூன்று நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடம் தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

ஆதனங்கள் கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியில் கணக்கீடு செய்தல் கொள்கையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்திற்குரிய பௌத்தலோக்க மாவத்தையில் அமைந்துள்ள 224 ஆம் ஆதன வரி இலக்க காணி மற்றும் களணி திரைப்பட அரங்கத்தின் காணி என்பன 2007 ஆம் ஆண்டின் போது இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இந்தக் காணியை மீள மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

- நீண்டகால வைப்பான தேசிய சேமிப்பு வங்கியில் உள்ள நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 17,891,742 தொகை குறுங்கால முதலீடாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை / பேரேட்டு மீதிகளை ஒப்பீடு செய்த போது ரூபா 13,495,075 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களினதும் றித்மா சபையின் புத்தகங்களினதும் பிரகாரம் உள்ளக திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கில் ரூபா 4,696,302 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் வங்கி நடைமுறைக் கணக்கின் வங்கி மீதி ரூபா 10,607,968 ஆக இருந்த போதிலும், வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 6,607,968 ஆனமையால் ரூபா 4,000,000 இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்பட்டோர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட பணத்தை உரிய நபர்களுக்கு மீளச் செலுத்துவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது வேறு பொருத்தமான செயற்பாடுகளோ எடுக்கப்படாமையின் காரணமாக ரூபா 1,110,955 தொகையான உடன்பட்டோர் செலவு மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) மருதானை, சினேசிட்டி திரைப்பட மண்டபத்திலிருந்து 2003 ஆம் ஆண்டு முதல் 2016 மே 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த திரைப்பட வாடகையான ரூபா 12,343,433 தொகையை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2016 மே 31 ஆந் திகதிக்குப் பின்னர் நாளாந்த அறிக்கை அனுப்பப்படாமையினால் அறவிட வேண்டிய திரைப்பட வாடகை வருமானத்தைக் கணிப்பீடு செய்வதற்கும் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கும் முடியாதிருந்தது.

(இ) சுயமாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்தற்காக திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற இழப்பீட்டுத் தொகையிலிருந்து மீதியாகக் காணப்பட்ட ரூபா 5,000,000 தொகை மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் சினிமா திரையரங்களிற்கு திரைப்படங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை தனியார் சபைகளுக்கு கையளிப்பதற்கு முன்னர் 163 சினிமா திரையரங்குகளிலிருந்து ரூபா 7,604,528 தொகையும், கையளிக்கப்பட்டதன் பின்னர் காணப்பட்டதுடன் தற்போது மூடப்பட்டுள்ள 186 சினிமா திரையரங்குகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 74,412,984 தொகையும் அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. மேலும், தற்போது அமுலிலுள்ள சபைகளுக்குரிய சினிமா திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 149,054,764 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அப்பணத்தை அறவிடுவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் சினிமாக்களின் தயாரிப்பு, ஏனைய கடன் மற்றும் ஊழியர் முற்பணம் என மொத்தக் கடன்கள் கூட்டுமொத்தமாக ரூபா 501,105,452 அறவிட வேண்டியிருந்தது. அந்தக் கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 129,103,283

தொகையான இணங்கப்படாத மற்றும் அறவிடமுடியாத கடன் மீதிகளுக்காக 100 சதவீதம் அறவிடமுடியாக் கடன் நிதிஏற்பாடும் மிகுதிக் கடன்பட்டோருக்காக 5 சதவீத அறவிட முடியாக் கடன் நிதிஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 146,733,583 தொகை அதாவது 29 சதவீதத்தை மீள அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 381(1) | அலுவலக வங்கிக் கணக்குகளை திறப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருடாக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 வரையிலும் 08 வங்கி நடைறைக் கணக்குகள் திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் அந்த வங்கிக் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 36,705,863 இருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 454(1) | பொருட் பதிவேட்டுப் பொருட்களின் பெறுவனவு, விநியோகித்தல் தொடர்பான பொது 44 படிவத்தின் பிரகாரம் பிரதான பொருள் இருப்புப் பதிவேடு ஒன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தந்த பிரிவிற்காக தனித்தனியான உரிய மாதிரிப் படிவத்தின் பிரகாரம் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 754 | ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும், பொருள் இருப்புப் பதிடே சமப்படுத்தப்பட்டு அடுத்த நிதியாண்டிற்கு முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 யூலை 22 ஆம் திகதிய அமப/05/0741/041/012 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களால் கைவிடப்பட்ட செப்பு, பித்தளை அலுமினியம், ஈயம் போன்ற இரும்பற்ற உலோகங்கள் மற்றும் விசேட வகை இரும்பு, இரும்புத் தாது மற்றும் உருக்குத் துண்டுகள் என்பன கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு விற்பனை செய்யப்பட முடியுமாக இருந்தபோதிலும் பல்கலைக்கழக திரைப்படக்கூடத்தின் பழைய கட்டிடமொன்றில் குவித்து வைக்கப்பட்டிருந்த இரும்பு, உடைந்த துண்டுகள் மற்றும் படச் சுருள்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) (i) | 1971 இன் நிதி அதிகாரச்சட்டத்தின் 10(5) மற்றும் 11 ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 47 ஆம் இலக்க திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை செலவினத்தை விஞ்சிய வருமானமான ரூபா 111,502,287 தொகை திறைசேரிக்கு அனுப்பப்படாதிருந்ததுடன் அப்பெறுமதியையும் உள்ளடக்கிய ரூபா 92,031,681 தொகை மற்றும் ரூபா 173,871,346 தொகைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி உண்டியல்களின் மீள் விற்பனைப் பணம் என்பன நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் அங்கீகாரமின்றி முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | நிதி அதிகாரச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது அரசாங்கத்திலிருந்து கிடைத்த மானியத் தொகையான ரூபா 74,250,000 கூட்டுத்தாபனத்தின் இலாபத்தைக் கணிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்படாதிருந்ததுடன் இலாப / நட்டக் கணிப்பீட்டின் பின்னர் விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. |

(ஈ) 1999 யூன் 17 ஆந் திகதிய தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் வழிகாட்டல்

(i) 2.1 ஆம் பிரிவு

திரைப்படங்களை பதிவு செய்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் போன்ற உற்பத்திக்குப் பின்னரான செயற்பாடுகளுக்காக ஆகக்கூடியது ரூபா ஒரு மில்லியன் வரையான கடன், மக்கள் வங்கியின் மூலம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து ரூபா 20 மில்லியன் கூட்டுத்தொகை "சரிகம" திரைப்படத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தது.

(ii) 9 ஆம் பிரிவு

திரைப்பட காப்பகமொன்றைத் தாபித்து அது முகாமைத்துவ திரைப்பட கூட்டுத்தாபனத்தால் பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், திரைப்பட கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 273 பழைய திரைப்படங்கள் மாத்திரம் சுவடிக் கூடத் திணைக்களத்தின் பாதுகாப்பகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும், 1947 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை திரையிடப்பட்ட 962 திரைப்படங்கள் மற்றும் புதிய திரைப்படங்களின் பிரதிகள் என்பவற்றை பாதுகாப்பதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மதுவரிக் கட்டளை இலக்கம் 902 இன் 111 ஆம் பட்டோலையின் (ஏ) மற்றும் (சீ) பிரிவுகள்

வணக்க ஸ்தலங்கள் அல்லது பாடசாலைகளுக்கு 500 மீற்றருக்குள்ளும் மதுபானங்கள் விற்பனை செய்யும் இடத்திலிருந்து காணப்பட வேண்டிய தூரம் அடி 500 இற்குக் குறைவாயின் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரத்தில் விநியோகிக்க முடியாதிருந்த போதிலும், அது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் சினிமா திரையரங்குகளில் மதுபான விற்பனைக்கான சிபாரிசு வழங்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஊ) | 1971 இன் 47 ஆம் இலக்க திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 61(2)(உ) பிரிவு | முப்பரிமாண (3D) திரைப்படங்களுக்காக திரைப்பட கண்காட்சியகங்களில் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தை விட ரூபா 100 மேலதிகமாக அறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபன புலனாய்வு உத்தியோகத்தர்களினால் அவ்வாறான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டு சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் திறைசேரி மானியம் கிடைப்பதற்கு முன்னர் ரூபா 34,688,806 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னயை ஆண்டின் நட்டம் ரூபா 59,186,725 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 24,547,919 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது. ஏனைய வருமானம் ரூபா 13,380,566 இனால் அதிகரித்தமை மற்றும் அறவிடமுடியாக் கடனும் பணிக்கொடை ஒதுக்கீடுகளும் ரூபா 23,539,330 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது திறைசேரி மானியத்தைப் பெறுவதற்கு முன்னர் நிதி விளைவில் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 50,487,786 தொகையான அது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 34,638,806 ஆக இருந்தது. எனினும், நிதி விளைவில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 31,192,547 தொகையான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 67,483,892 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் திரைப்படங்களைத் தயாரித்தல் மற்றும் திரைப்படங்களை காட்சிப்படுத்துவதற்குத் தேவையான படச் சுருள்கள், திரைப்படங்கள், புகைப்பட உபகரணங்களின் இறக்குமதி, திரைப்படங்களின் கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலாக திரைப்படங்களை ஏற்றுமதி செய்தல், திரைப்படத் தயாரிப்பிற்கான படப்பிடிப்பு அரங்கத்தையும் திரைப்பட கண்காட்சி கூடங்களையும் தாபித்தல், திரையரங்கு வசதிகளை வழங்குதல் மற்றும் நிதி ரீதியாக உதவிசெய்தல், திரைப்படத் தயாரிப்பாளர்களிற்கான உபகாரம் செய்தல், பரிசுப்பொருட்கள் மற்றும் விருதுகளை வழங்குதல், கலந்துரையாடல்கள் மற்றும் செயலமர்வுகளை ஒழுங்குசெய்து நடாத்துதல், திரைப்பட விழாக்களை நடாத்துதல், திரைப்படங்கள் மீது பருவகால சஞ்சிகைகளை வெளியிடுதல் மற்றும் இலங்கைக்குள்ளேயும் இலங்கைக்கு வெளியேயும் திரைப்படங்கள் தொடர்பான சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொலைக்காட்சி அல்லது ஏனைய துறையொன்றில் திறமைகளைக் காண்பித்துள்ள இளம் சினிமா தாரர்களுக்கு தமது ஆரம்ப திரைப்பட தயாரிப்பிற்காக அரசாங்கத்தின் அனுசரனையைக் காண்பிப்பதற்காக வருடமொன்றிற்கு 04 திரைப்படங்களுக்கு படப்பிடிப்பு அரங்கு தயாரிப்பிற்காக ரூபா 12 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப்பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திரைப்படக் கைத்தொழிலை மேம்படுத்துவதை அடிப்படை நோக்கமாகக்கொண்டு தயாரிப்பாளர்களிற்கு திரைப்படத் தயாரிப்பிற்கான நிதி உதவிகளை வழங்குவது நோக்கமாக இருந்தபோதிலும் அவ்வாறான தயாரிப்புக் கடன்கள் எதுவும் 2012 இலிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. இலங்கைக்குள்ளேயும் அதே போல் வெளியேயும் திரைப்படங்கள் தொடர்பில் சந்தை ஆய்வுகளை நடாத்துவதால் அத்தகைய நோக்கங்களை அடைவதற்கு அவ்வாறான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சகல சினிமாத் திரையரங்கும் ஆகக் குறைந்ததது மாதத்திற்கு ஒரு தடவை பரிசோதனைக்கு உட்படும் வகையில் அதாவது ஒட்டுமொத்தமாக 2000 கண்காட்சி தடவைகளை பரீட்சிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 850 கண்காட்சித் தடவைகள் மாத்திரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சர்வதேச நியமத்தின் பிரகாரம் திரைப்படத்தின் சுற்றி வரவுள்ள ஒலியை ஒன்றுசேர்ப்பதற்காக (Surround Sound) விஜய குமாரதுங்க மேடையில் ஒலித்தெறிப்பு கட்டுப்படுத்தும் (Acoustic treatment) உபகரணங்களைக் கொள்வனவு செய்து பொருத்துதல் மற்றும் படத்திற்கான பாட்டுக்கள் மற்றும் சங்கீதங்களை ஒழுங்கமைப்பதற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 30 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) திரைப்படக் கைத்தொழில் தொடர்பாக முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு விசேட பிரிவொன்று கூட்டுத்தாபனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் பார்வையாளர்களிடமிருந்தும் திரைப்படத் தயாரிப்பாளர்களிடமிருந்தும் திரைப்படக் கைத்தொழில் தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் முறைப்பாடுகளை உரிய பிரிவுகளிற்கு தெரியப்படுத்தி கால ரீதியாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், திரைப்படக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தேசிய கொள்கைகளை உருவாக்குவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கையரை சினிமாவின் அடையாளமாக பாதுகாப்பதன் மூலம் சர்வதேச தரத்தை அடையக்கூடிய வகையில் தயாரிப்புக்களை கையளித்தல் கூட்டுத்தாபனத்தின் தூரநோக்காக உள்ள போதிலும் வேண்டப்பட்ட நிதி உதவி புதிய தயாரிப்பாளர்களிற்கு வழங்கப்பட்டிருக்காமையால் புதிய தயாரிப்பாளர்களுக்கு முன்னோக்கி வருவதற்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்ததுடன் சரியான படைப்புக்களை தயாரிப்பதற்குப் பதிலாக வணிக ரீதியான திரைப்படங்களை முன்வைப்பதன் மூலம் பணமீட்டுவதே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தில் 10 தொழிலாளர்களின் மிகையொன்று காணப்படும் போது மாதாந்தம் ரூபா 293,490 தொகை செலுத்தும் இணக்கப்பாட்டின்

அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்த தனியார் சேவை வழங்குனருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் தேவையான ஊழியர் எண்ணிக்கையை ஈடுபடுத்துவதற்கு இந்த நிறுவனம் தவறியிருந்தமையின் காரணமாக திருப்திகரமற்ற சேவை வழங்கலொன்று தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு சினிமா திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணம் மற்றும் திரைப்பட தயாரிப்பிற்காக வழங்கப்பட்டுள்ள கடன் பணம் ரூபா 192 மில்லியன் தொகையை பதிவழிப்பதற்காக அங்கீகாரம் கோரப்பட்ட கோரிக்கைக் கடிதத்தின் பதிலாக 2015 ஆகஸ்ட் மாதத்தின் PE/ME/NFC/GEN/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவினாலும் (COPE) சிபாரிசு செய்யப்பட்டதன் பிரகாரம், அமைச்சு மட்டத்தில் குழுவொன்று நியமித்து நிலுவைப் பணத்தை சேகரிப்பதற்காக முறையான திட்டமொன்று தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், நியமிக்கப்பட்டுள்ள குழுவிற்காக அமைச்சின் பிரதிநித்துவம் இடம்பெற்றிருக்காமை.

(ii) உரிய கடன் பணத்தை அறவிடுவதற்காகவுள்ள சட்ட ரீதியான இயலுமை தொடர்பாக புலனாய்வு செய்யாமை மற்றும் அவ்வாறு புலனாய்வு செய்வதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற கடன்பட்டோரின் சட்டத்தின் பிரகாரம், உரிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(iii) ஆகக் குறைந்தது தற்போது செயற்படுகின்ற சினிமா திரையரங்குகளிலிருந்து தவணைப் பணமாக, நீண்ட கால அல்லது பெறப்பட்ட கடன் பணத்தை தீர்த்து கொள்வதற்கு முறையான செயல்நடைமுறையொன்று மேற்கூறப்பட்ட கடன் குழுவினால் சமர்ப்பிக்கப்படாமை.

(iv) மேற்கூறப்பட்ட (ii) மற்றும் (iii) இல் அறவிடக்கூடிய கடன் தொகை தவிர மிகுதித் தொகையை பதிவழிப்பதற்காக அமைச்சரவைக்கு அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பித்து அங்கீகாரம்

பெறவேண்டியமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமை.

(இ) கூட்டுத்தாபனத்தின் கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பௌத்தலோக மாவத்தையில் ஆதன வரி இலக்கம் 303 இலுள்ள காணியின் சட்டரீதியான உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கும் காணியின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி உண்டியல் மீள்விற்பனையின் போது ஒரு வங்கியிலேயே தொடர்ச்சியாக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதன்மைச் சந்தையில் அரசாங்க வங்கிகளிலிருந்து கூறுவிலை கோரி மிகவும் சிறந்த நலன் பங்களிப்பு வட்டி வீதத்தின் அடிப்படையில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மத்திய வங்கியின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற திறைசேரி உண்டியல் ஏலவிற்பனையின் போது செலவு வைக்கப்பட்ட சராசரி வட்டி சிகிதத்தை விட 0.2 சதவீத அளவில் குறைந்த சதவீதத்தில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 264,903,027 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**4.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்கு எவ்வித தொடர்பும் இன்றியும், அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சட்ட ஏற்பாடுகள் இன்றியும் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் றித்மா சபையின் 39 சினிமா திரையரங்குகளில் சில வருடங்களுக்கு முன்பிருந்தும், ஏனை சபைகளின் 16 சினிமா திரையரங்குகளில் மீளாய்வாண்டின் போது மதுபான அனுமதிப்பத்திரம் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க அனுசரணையின் கீழ் மதுபான அனுமதிப்பத்திரம் விநியோகப்படுத்தல் இலங்கை அரசாங்கத்தின் "மத்தட தித்த" கொள்கைக்கு முரணான செயற்பாடாக இருந்ததுடன் குடும்ப திரைப்படங்கள் மற்றும் சிறுவர் திரைப்பட கண்ணகாட்சிகள் போன்ற சந்தர்ப்பத்தின் போதும் மதுபானங்களுக்காக சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் திரையரங்குகளுக்காக மதுபான அனுமதிப்பத்திரம் சிபாரிசு செய்யப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

(இ) விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் மதுபானம் விற்பனை செய்பவர்களுக்காக மாத்திரம் செய்யப்பட வேண்டிய போதிலும், நடாத்துபவர்கள் அல்லாத ஒரு தரப்பினருக்கு மதுபான விற்பனை செய்வதற்கும் மதுபான விற்பனை உரித்தை தனியாருக்கும் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 08 வங்கிக் கணக்குகளில் மாதாந்த சராசரி மீதி ரூபா 55,560,598 ஆக இருந்ததுடன், அந்தத் தொகையில் ஒரு பகுதியை குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தி மேலதிக வருமானமொன்றைப் பெறக்கூடியதாக இருந்த போதிலும், அது தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.6 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 870,659 கூட்டுத்தொகையான யானைத் தந்தம் மற்றும் இரசாயனப் பொருட்களின் இருப்பு 2014 ஆம் ஆண்டிலிருந்து விநியோகிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 156,800 பெறுமதியான முச்சக்கர வண்டியைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 200,000 செலவாகின்றமையால் பழுதுபார்த்தல் வினைத்திறனற்றதாக 2017 செப்தெம்பர் 22 ஆந் திகதி வாகன இயந்திர ஆலோசகர் சிபாரிசு செய்திருந்த போதிலும் அதனை விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தலைமை அலுவலகத்தின் நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்ட 500 இற்கு மேற்பட்ட நூலகப் புத்தகங்களின் அளவொன்று களணி பல்கலைக்கழக திரைப்படக் கூடத்தில் பாதுகாப்பற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிமையின் காரணமாக அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது.

**4.7 தாமதமான செயற்திட்டங்கள்**

பல்கலைக்கழக திரைப்பட கூடத்தில் திரைப்பட தயாரிப்பதற்குப் பின்னரான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 30 மில்லியன் திறைசேரி நிதிஏற்பாடு கிடைத்திருந்ததுடன் அதற்காக கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், அவை கூட்டுத்தாபனத்தின் மாதிரிகளுக்கு

இணங்காமையினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. தேவையான மாதிரிகளைத் தயாரித்தல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகளுக்காக இந்திய மதியுரையாளருக்கு அமெரிக்க டொலர் 8,000 செலுத்தியிருந்த போதிலும், 2017 மே வரையிலும் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2017 இன் செயற்திட்டத்தை 03 கட்டங்களின் கீழ் நிறைவேற்றுவதற்குத் தேவையான மதியுரைச் சேவைகள் மாத்திரம் பெறப்பட்டிருந்தன.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 71 ஆக இருந்ததுடன் தற்போதைய தேவையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் எண்ணிக்கை மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், அத்தியவசியமான 02 பதவிநிலைப் பதவிகள், சிறிது காலமாக வெற்றடமாகக் காணப்பட்டமையின் காரணமாக உயர் முகாமைத்துவத்தின் வழிகாட்டல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் திட்டம் தயாரிக்கும் போதும், இலக்கினைக் கட்டியெழுப்பும் போதும், அந்த இலக்கினை அடைந்து கொள்வதற்காக செயற்படும் போதும் பிரச்சினைகள் தோன்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளை நிரப்புவதற்காக வெளி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி அந்த வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு 2016 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை 12 ஆந் திகதி வரை எந்த ஆட்சேர்ப்புக்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டுத்தாபனத்தில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது அதன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

கூட்டிணைந்த திட்டத்தின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காலாண்டு ரீதியாக இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதன் செயலாற்றலை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் 03 நிரந்தர கணக்காய்வு உதவியாளர் பதவிகள் காணப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு உதவியாளரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டுத்தாபனம் போதயிளவில் கவனம் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.4 கணக்காய்வு குழு**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**5.5 பெறுகைகள் திட்டம்**

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று வருட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கான பிரதான பெறுகைகள் திட்டமொன்றும், 4.2.2 இன் பிரகாரம் பெறுகைகள் கால அட்டவணையும் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக மாத்திரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும், மிகவும் அவசர தேவையான காபன் கொள்வனவு செய்தல், கணனி இணையத்தளப்படுத்தல் இலக்க தொழில்நுட்ப திரைப்பட பேகேஜ் தரப் பரிசோதனை இலக்க ரீதியிலான தொழில்நுட்பத்திற்கு உட்படுத்துவதற்கு ரூபா 16 மில்லியனும், பொதுவான தேவையாக கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மின்பிறப்பாக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5.6 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2017 மே 23 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக் கட்டுப்பாடு | (i) திரைப்படக்கூடத்தில் காணப்படுகின்ற விளைவற்ற சொத்துக்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை. |
| | (ii) நூலகப் புத்தகங்கள் பாதுகாப்பின்றிக் வைக்கப்பட்டிருந்தமை. |
| | (iii) இருப்புப் புத்தகம் பெறுவனவு, விநியோகித்தல்களை இனங்காண்பதற்கு இலகுவான வகையில் சரியான பிரகாரம் பராமரிக்கப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) 10 வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதி தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக சரியான மேற்பார்வையொன்று காணப்படாமை |

(iii) கடனை அறவிடும் வேலைத்திட்டமொன்றோ அல்லது பிரிவொன்றோ தாபிக்கப்படவில்லை.

(இ) வருமானக் கட்டுப்பாடு

(i) திரைப்பட வாடகை வருமானம் மற்றும் வருடாந்தம் அறவிட வேண்டிய வாடகைப் பணம் என்பவற்றை அறவிடுதல் தொடர்பாக மேற்பார்வையொன்று காணப்படாமை

(ii) சினிமா திரையரங்குகளிலிருந்து கிடைத்த வருமானம் உறுதிப்படுத்தப்படாமல் தயாரிப்பாளரின் வாடகை வருமானத்தை பகுதியாகச் செலுத்தியமை

(ஈ) கடன் கட்டுப்பாடு

திரைப்பட விளம்பர கடன் பணத்தை அறவீடு செய்யும் போது உடன்படிக்கையின் பிரகாரம் முதலாவது வருமானத்தில் அறவிடப்படாமை

(உ) கணனி மென்பொருள் முறைமைக் கட்டுப்பாடு

(i) ஒவ்வொரு உத்தியோகத்தரின் மட்டத்திற்காகவும் தனிப்பட்ட கோவை வழங்கப்படாமை.

(ii) பிரதான கோவையில் தரவுகளை மாற்றுதல் பதவிநிலை உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படாமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை

(iii) பெறப்பட்ட முற்பதிவுகளை (backup) அந்த இடத்திலேயே வைத்தல்

(iv) Teamviewer மென்பொருள் மற்றும் இணையத்தள வசதிகள் மூலம் வெளிநபர்களுக்கு சம்பளம் தயாரிக்கும் முறைமையில் உட்செல்லும் அபாயம் காணப்பட்டமை

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

**NATIONAL FILM CORPORATION OF SRI LANKA**


අංක 303, බෞද්ධාලෝ ක මාවත, කොළඹ 07. | දුරකතන - 0112-584623 / 0112-58877 3 | විද්‍යුත් තැපෑල-filmcorp@sltnet.lk | වෙබ් අඩවිය -www.nfc.gov.lk

இல.303, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. | தொலைபேசி-0112-584623 / 0112-588773 | மின்னஞ்கல் புக்குககுகின்-filmcorp@sltnet.lk | இணையக்குளம்-www.nfc.gov.lk

No.303, Bauddhloka Mawatha, Colombo 07. | Tel - 0112-584623 / 0112-588773 | Email-filmcorp@sltnet.lk | Website-www.nfc.gov.lk